ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

21.10.2009 - மலர் 06, இதழ் 33




## நிலவில் மோதியது ரொக்கெட்

## கனிய எண்ணெய் உருவாகும் விதம்

## பாதுகாப்பான நவீன பயிர்ச்செய்கை முறை

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# நிலப்பகிர்வு

குலம், பழக்கம் சம்பந்தப்பட்ட வழக்குகள் அன்று இருந்தன. அத்துடன், சம்பிரதாயங்கள் குறித்தும் வழக்குகள் இருந்தன. அவை நாட்டுப் பேரவை மூலமே தீர்க்கப்பட்டன. அந்நாட்டுச் சபைகளின் தலைவராக 'நிலமே' எனும் பதவியில் உள்ளவர் இருந்தார். அன்று கிராம சபை முறைமையும் இருந்தது. ஒவ்வொரு கிராமங்களுக்கும் உரிய நடவடிக்கைகள் அனைத்தும் கிராம சபைகள் மூலம் நிறைவேற்றப்பட்டன.

நாட்டின் சகல இடங்களும் அரசனுக்கே சொந்தமாக இருந்தன. அவரது விருப்பத்தின்படியே அந்த இடங்கள் விகாரைகளுக்கும் தேவாலயங்களுக்கும் உயர்குடிகளுக்கும் மற்றும் சேவை செய்பவர்களுக்கும் பரிசாக வழங்கப்பட்டன. சில இடங்கள் மன்னனின் தேவைகளுக்கென ஒதுக்கப்பட்டன. அத்தகைய இடங்களில் மன்னனுக்காக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்கள் வாழ்ந்தனர். அதுமாத்திரமல்ல, அரச மாளிகையில் பல்வேறு சேவைகள் செய்தவர்களும் அவ்விடங்களில் வாழ்ந்தனர். இவர்கள் அந்த இடங்களை விற்கமுடியும். எனினும், அந்த நிலங்களை வாங்கியவர்களும் விற்றவர்கள் மன்னனுக்கு செய்யும் அத்தனை சேவைகளையும் செய்வதற்கு கட்டுப்பட்டவர்கள் ஆவர். மன்னனின் இடத்தை வாங்காதவர்கள் எந்த சேவைகளுக்கும் கட்டுப்படவில்லை.

நிலங்களைப் பெறுவதற்காக ஆற்ற வேண்டிய சேவைகளுக்கு மேலதிகமாக 'மாரால' எனும் மரணவரி செலுத்த வேண்டுமென்றும் மன்னன் மற்றும் உயர்குடியினருக்கு பரிசுகளைக் கொண்டு செல்லவேண்டும் என்றும் கட்டளை விதிக்கப்பட்டிருந்தது. இவை 'பெரஹர' நடத்தப்படும் காலத்தில் அல்லது படைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அறுவடையை விற்பதற்காக பயிர்ச்செய்கையை அவர்கள் மேற்கொள்ளவில்லை. மாறாக மன்னனின் பயன்பாட்டிற்கும் பயிர்ச்செய்கையாளர்களின் பாவனைக்காகவுமே மேற்கொள்ளப்பட்டன. பொருட்களை பண்டமாற்று செய்வதற்கும் அவர்களுக்கு அதிகாரம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் இங்கிலாந்தைச் சேர்ந்த செம்செம் என்பவர் அனைவரையும் ஆச்சரியப்பட வைக்கும் விதத்தில் மிகப்பெரிய சவர்க்காரக் குமிழொன்றை உருவாக்கியுள்ளார். 37 வயதுடைய இவர், ஒரு சவர்க்காரக் குமிழ்நிபுணராவார்.

கயிற்றுத்துண்டொன்றின் இரு முனைகளையும் இரண்டு தடிகளினால் கட்டி, அதன் மூலம் இந்தக் குமிழை உருவாக்கியுள்ளார். குமிழ்நிபுணரான இவர், ஏற்கனவே பல சவர்க்காரக் குமிழ்களை உருவாக்கியிருந்தபோதும் அவை தரையில் படிந்த நிலையிலேயே காணப்பட்டன. எனினும், இந்தக் குமிழானது காற்றில் மிதக்கும் தன்மையுடன் இருக்கின்றது. இதுவரை பதியப்பட்டுள்ள உலகின் மிகப் பெரிய சவர்க்காரக் குமிழின் சாதனையை செம்செம்மின் இந்தக் குமிழ் முறியடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செம்செம் தொழில்ரீதியில் குமிழ்களை உருவாக்கக்கூடிய கரைசல்களைத் தயாரிக்கும் நிறுவனமொன்றை நிர்வகித்து

# இது பலூன் அன்று; சவர்க்காரக் குமிழ்



வருகின்றார். இதுதவிர, பார்வையாளர்களுக்கான நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றார். இவரது குழுவில் 10 குமிழ்நிபுணர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். சுமார் 20 வருடகால அயராத முயற்சியின் பின்னரே செம்செம்மால் இந்தக் குமிழை உருவாக்க முடிந்துள்ளது. இவர், 2007 ஆம் ஆண்டு 50 பேரை நிற்க வைத்து அவர்களைச் சூழ சவர்க்காரக் குமிழை உருவாக்கி சாதனை படைத்துள்ளார். அத்துடன், 66 சிறிய சவர்க்காரக் குமிழ்களை ஒரு பெரிய சவர்க்காரக் குமிழுக்குள் உள்ளடக்கியும் சாதனை படைத்துள்ளதோடு, அதற்கான விருதொன்றையும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-ஜீநு

# கல்வியை மேம்படுத்துவதில் பத்திரிகைகள் பாரிய பங்களிப்பை செய்கின்றன

## தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்



"பாடசாலை வகுப்பறையினுள் நடைபெறுகின்ற சம்பிரதாயபூர்வ கல்வி நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் பத்திரிகைகள் வழங்கக்கூடிய பங்களிப்பு மிகச் சிறப்பு வாய்ந்தது. தகவல் தொடர்பு மற்றும் ஊடகத்துறை கல்வி ஆகியவை தொடர்பான விடயங்களை அறிவதற்கான ஆரம்பப்படியாக இதனைக் கருதமுடியும்" என தேசிய கல்வி நிறுவகத்தின் நிர்வாகப் பணிப்பாளர் பேராசிரியர் லால் பெரேரா தெரிவித்துள்ளார். 'வகுப்பறைக்கு பத்திரிகைகள்' என்ற தொனிப்பொருளில் ஊடகத்துறை கல்வி தொடர்பான கலந்துரையாடல் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை வேலைத்திட்டத்திற்கான நிகழ்வில் உரை நிகழ்த்துகையிலேயே இக்கருத்தினை அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பத்திரிகை சபையின் நிறைவேற்று உறுப்பினரான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த லேனி காஹில் அவர்களின் தலைமையில் மேற்படி பயிற்சிப்பட்டறை நடைபெற்றதுடன், ஊடகக்கல்வியைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய பேராசிரியர் அவர்கள், "தற்போதெல்லாம் வானொலி, தொலைக்காட்சிகளில் பத்திரிகை செய்திகள் வாசிக்கப்படுவதானது வாசகர்கள் நேரடியாகப் பத்திரிகையை வாசிப்பதற்கான வாய்ப்பை இல்லாது செய்துவிடுகின்றது. இதனால், பத்திரிகைக்கும் வாசகர்களுக்குமான இடைவெளி அதிகரிக்கப்படுகின்றது. இதில் வாசிப்புத் திறனும் பாதிக்கப்படுகின்றது. எனினும், வகுப்பறையில் பத்திரிகைகள் எடுத்துவரப்பட்டு ஆய்வுகள் செய்யப்படுவதன்மூலம் பத்திரிகையின் பயனை மாணவர்களுக்குப் பெறச்செய்ய முடியும். இதனால், வாசிப்புத் திறனும் அதிகரிக்கப்பட்டு, மாணவர்களின் அறிவைப் பெருக்குவதற்கும் அது தூண்டுகோலாக அமையும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும்

# உரிய வயதுடையவராக இல்லாதிருப்பின் பிரதான பாடசாலையும் இல்லை



2010 ஜனவரி 31 ஆம் திகதியாகும்போது 10 வயதுக்குக் குறைந்த மற்றும் 11 வயதுக்குக்கூடிய மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும், அவர்களுக்கு பிரதான பாடசாலை அனுமதி மற்றும் மாணவர் உதவித்தொகை என்பன வழங்கப்படமாட்டாது என பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் சீர்திருத்த அறிக்கை மற்றும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை என்பனவற்றிற்கு அமைய, இந்த வயதெல்லைக்குட்பட்டவர்களுக்கு மாணவர் உதவித்தொகை மற்றும் பிரதான பாடசாலை அனுமதி வழங்கப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வயதெல்லைக்குட்பட்ட மாணவர்கள் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கக்கூடாது என முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தபோதும், சில அதிபர்கள் அந்த அறிவுரையைக் கவனத்தில்கொள்ளாமல் செயற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு


இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
**த.பெ. எண் 2037, கொழும்பு.**

என்ற முகவரிக்கு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். **ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம்.** இதற்காக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்.
தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள் SPOKEN ENGLISH
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
கிளாஸ் போகும் காலம். நேரம் மிகுதி
குருகிய காலம் / வயது எல்லை இல்லை
வீண் கட்டணங்கள் செலுத்த வேண்டாம்
பாடநெறியில் இணையும் உங்களுக்கு
அழகிய பேக் ஒன்றும் **Tigo Sim** (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
எமது Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்.
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரமிட்

# நைல் நதிப் பள்ளத்தாக்கில் கட்டி எழுப்பப்பட்ட 'பிரமிட்'

கி.மு 3100-1070 இற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் நிலவிய நாகரிகமே எகிப்திய நாகரிகமாகும். இதற்கு 'நைல்நதி நாகரிகம்' என மற்றொரு பெயரும் உண்டு.

இந்த நாகரிகத்தில் வந்த மன்னர்கள் 'பாராவோ' என அழைக்கப்பட்டனர். அவர்கள் இறந்தபின் 'பிரமிட்' என அழைக்கப்படும் கல்லறைகளிலேயே அவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. அந்த பிரமிட் கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்ட பூதவுடல்கள் இன்றும் அழியாமல் இருப்பது ஒரு விசேட அம்சமாகும். உடல்கள் பழுதடையாமல் இருப்பதற்கு அந்தக் காலத்திலேயே அவர்கள் உயர்ந்த


துதன்காமனின் சிரம்



தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியது வியத்தகு அம்சமாகும். 'பிரமிட்' கட்டி எழுப்பப்பட்ட தொழில்நுட்பமானது இன்றும் புதுமை நிறைந்ததாகவே கருதப்படுகின்றது. இதனை கட்டியெழுப்ப அவர்கள் பயன்படுத்திய சில கற்கள் 21/2 தொன் அளவு நிறையுடையதாகக்கூட இருந்தன. இத்தகைய பல மில்லியன் கற்கள் ஒரு பிரமிட்டுக்காக பயன்படுத்தப்பட்டன. இவை மிகத் தூரத்தில் உள்ள பிரதேசங்களில் இருந்து 'நைல்நதி' வழியாக படகுகள் மூலம் கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அக்காலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் சோளம், பார்லி, பேரீச்சம்பழம் ஆகியனவற்றையே உணவாகக் கொண்டனர். பாணை வெதுப்புவதற்கும் அறிந்திருந்தனர்.

அத்துடன், சித்திரக்கலைக்கு மிகவும் பெயர் பெற்ற நாகரிகமாக 'நைல்நதி' நாகரிகத்தைக் கருதலாம். கலப்பையால் உழுது கொண்டு செல்லும் ஒரு விவசாயியின் பின்னால் பெண் ஒருவர் விதை விதைக்கும் காட்சியைக் கொண்ட ஓவியம் மிகவும் பழைமை வாய்ந்தது எனக் கருதப்பட்டது. இந்தப் புராதன ஓவியமானது அக்காலத்தில் அங்குள்ள மக்கள் மேற்கொண்ட தொழிலையும் உட்கொண்ட உணவு வகைகளையும் நன்கு தெளிவுபடுத்துகின்றது. அக்காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பாக நடைபெற்றது. தானிய வகைகள், புடைவை வகைகள், 'பெப்பிரஸ்' இதழ்கள் போன்றவை ஏற்று மதிக்குரிய பொருட்களாக இருந்தன.

எழுத்துக்கலையைப் பொறுத்தவரையில் எகிப்திற்கு விசேட இடமொன்றுள்ளது. களிமண் சுவர்களில் மற்றும் 'பெப்பிரஸ்' இதழ்களில் எழுதப்பட்டவை ஏராளமாகும். மெருகூட்டப்பட்ட சுவர்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களும் வரையப்பட்ட ஓவியங்களும் ஏராளம். 'பிரமிட்' நிர்மாணத்தின் மூலமே எகிப்திய கலைப்பொக்கிஷங்கள் உலகிற்கு அறிமுகமாகின எனலாம்.

-இரஞ்சித் ஜெயகர்

## எகிப்திய நாகரிகத்தின் மூலம் உலகம் பெற்றவை

- ஓவிய வடிவத்தின் மூலம் எழுதும் கலை
- கணிதம்
- வைத்திய சாஸ்திரம்
- நீர்ப்பாசன தொழில்நுட்பம்
- கட்டடப் பொறியியல் துறை
- உலோகக் கைத்தொழில்
- கைரேகை சாஸ்திரம்
- கடல் பயணங்கள்
- சூரியக் கடிகாரமும் நீர்க்கடிகாரமும்
- விளையாட்டு உபகரணங்கள்
- மம்மி


மம்மியொன்று


பறவை வேட்டை


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்


பெயர்:....................................
முகவரி:....................................
....................................
பாடசாலை:....................................
வகுப்பு:....................................
திகதி:....................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிலவில் ஆய்வு செய்ய ரொபோவொன்று உருவாக்குங்கள்"




## இந்திய முன்னாள் ஜனாதிபதி கலாம் ஆலோசனை

சந்திரயான் 2 திட்டத்தை அமுல்படுத்தும்போது, சந்திரனில் இறங்கி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ரொபோவொன்றை உருவாக்கும்படி இந்திய விண்வெளி ஆய்வு மையம் மற்றும் நாஸா விஞ்ஞானிகளுக்கு இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் ஆலோசனை வழங்கியுள்ளார். மும்பையில் பாடசாலை மாணவர்களுக்காக, 'சந்திரயான் : உறுதிமொழிகளும் கவலைகளும்' என்ற தலைப்பிலான தேசிய கருத்தரங்கொன்றை தேசிய அறிவியல் அருங்காட்சியக பேரவை கடந்த மாதம் இறுதிப்பகுதியில் நடத்தியது. இதில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கலந்து கொண்டார்.



மாணவர்களிடையே அவர் உரையாற்றியபோது; "அமெரிக்காவில் உள்ள கெலிஃபோர்னியா தொழில்நுட்ப மையத்துக்கு சமீபத்தில் சென்று இருந்தேன். அப்போது, சந்திரயான் செயற்கைக் கோளுடன் சந்திரனுக்கு அமெரிக்கா அனுப்பிய எம்3 கருவி கண்டறிந்த விடயங்களை இந்திய விஞ்ஞானிகளிடம் 'நாஸா' விஞ்ஞானிகள் கையளித்தனர். அவ்விடத்தில் சந்திரயான் 2 திட்டத்தின்போது சந்திரனில் இறங்கி, ஆய்வுகளை செய்வதற்காக ரொபோவொன்றை உருவாக்கி அனுப்பவேண்டும் என்று அவர்களுக்கு நான் ஆலோசனை வழங்கினேன். அத்துடன், விண்வெளிக்கு அனுப்பும் விண்கலங்களைத் தயாரிப்பதற்கு ஆகும் செலவைக் குறைப்பதற்காக 2050 ஆம் ஆண்டுக்குள் ஒரு கிலோ எடையில் விண்கலங்களைத் தயாரிக்க முயற்சிக்கும்படி அந்த விஞ்ஞானிகளைக் கேட்டுக்கொண்டேன்" என்று தெரிவித்துள்ளார்.




## நாஸா அனுப்பிய ரொக்கெட் நிலவில் மோதியது

நிலவில் நீர் இருக்கின்றதா? என்பதை அறிய சந்திரனை நோக்கி நாஸா ஏவிய ரொக்கெட் நிலவில் வெற்றிகரமாக மோதியது. அதனூடாகக் கிடைத்த விபரங்களை நாஸா விஞ்ஞானிகள் தற்போது ஆய்வு செய்து வருகிறார்கள்.



சந்திரனில் நீர் இருப்பதற்கான ஆதாரங்களை கடந்த மாதம் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸாவும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான 'இஸ்ரோ'வும் கண்டுபிடித்தன. இந்த நிலையில், சந்திரனின் ஒரு பகுதியில் உள்ள 100 கி.மீ அகல பள்ளத்தில், பல ஆண்டுகளாக சூரிய ஒளியே படாததால், அந்த இடத்தில் பனிக் கட்டிகள் உறைந்திருக்கலாம் என்றும், அப்பகுதியை தகர்த்தால் அங்கு நீர் இருக்கின்றதா என்பதை அறிந்துகொள்ளலாம் என்றும் நாஸா விஞ்ஞானிகள் கருதினர். இதற்காக,'LCROSS' என்ற ரொக்கெட்டையும் அதனுடன் 'கெமரா' உள்ளிட்ட சாதனங்கள் இணைக்கப்பட்ட ஒரு ரொக்கெட்டையும் அனுப்பி வைத்தனர்.

அதன்படி, 'LCROSS' என்ற 2,200 கிலோ எடைகொண்ட ரொக்கெட், இம்மாதம் 9 ஆம் திகதி சந்திரனின் தென் துருவம் அருகே உள்ள ஒரு பள்ளத்தில் மணிக்கு 9 ஆயிரம் கி.மீ வேகத்தில் மோதியது. அப்போது 350 டொன் எடையுள்ள துகள் படிமங்கள் சிதறின. மோதிய இடத்தில் ராட்சதப் பள்ளம் உருவானது. மோதல் நடந்து 4 நிமிடங்களுக்குப் பின்னர் 'கெமரா'உள்ளிட்ட சாதனங்களுடன் கூடிய ரொக்கெட்டும் சந்திரன் மீது மோதியது. இந்த ரொக்கெட்டானது சந்திரன் மீது மோதுவதற்கு முன்னர் முதலாவது ரொக்கெட் மோதியபோது ஏற்பட்ட விளைவுகளை பதிவு செய்து, அந்த தகவல்களை பூமிக்கு அனுப்பியது.




இரண்டாவது ரொக்கெட் ப்திவு செய்த விபரங்களை நாஸா விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகிறார்கள். சந்திரனில் தண்ணீர் இருக்கிறதா? இல்லையா? என்பதை அவர்கள் உடனடியாக உறுதிப்படுத்தவில்லை. அதை உறுதிப்படுத்த இன்னும் சில வாரங்கள் ஆகும் என்று இந்த திட்டத்தின் தலைமை விஞ்ஞானி என்டனி கொலப்ரீடி தெரிவித்துள்ளார். ஆனால், மோதல் காட்சியை 'கெமரா' பதிவு செய்யத் தவறிவிட்டது. இதனால், உலகம் முழுவதும் நாஸா இணையத்தளத்தை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்த மக்களால் மோதல் காட்சியை காண முடியாமல் போனது. இருப்பினும், மோதல் நடந்ததை நாஸா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தினர். ரூ.395 கோடி செலவில் இந்த ஆய்வை நாஸா மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சனிக் கிரகத்தைச் சுற்றி புதிய ராட்சத வளையம்

சனிக் கிரகத்தைச் சுற்றி ஒரு ராட்சத வளையம் இருப்பதை அமெரிக்காவின் 'ஸ்பிட்சர்' விண்வெளி தொலைநோக்கியூடாக முதல் முறையாக அவதானிக்கப்பட்டுள்ளது. விண்வெளி ஆய்வில் இதுவொரு முக்கிய கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.

சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களில் பூமிக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்ற கிரகமாகத் திகழ்வது சனிக் கிரகமாகும். ஏனைய கிரகங்களை விட சனிக் கிரகத்தை வித்தியாசப்படுத்திக் காட்டுவது, அதைச் சுற்றி உள்ள அழகிய வளையங்கள்தான். அந்தவகையில், சனியைச் சுற்றி மொத்தம் 7 தெளிவான வளையங்கள் இருப்பது ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளது. இவைதவிர, மங்கலான மேலும் பல வளையங்களும் இருக்கின்றன. இப்போது முதல் முறையாக மேலும் ஒரு வளையம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மிக பிரமாண்டமான ராட்சத வளையமாகக் காட்சி அளிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ராட்சத, வளையம் பனி (ஐஸ் துகள்கள்) மற்றும் துகள்களால் உருவானதாகும். இது மிக, மிக குளிர்ச்சியாகக் காணப்படுகின்றது. இதனுள்



நிலவும் வெப்பநிலை 316F எனக் கூறப்படுகின்றது. மற்றைய வளையங்களைவிட இதன் சுற்றுப்பாதை 27 சாய்வாகக் காணப்படுகிறது. வளையத்தின் ஆரம்பப் பகுதி சனிக் கிரகத்தில் இருந்து சுமார் 60 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் தொடங்கி, அதிகபட்சம் 12 லட்சம் கிலோமீற்றர் தூரம் வரை நீண்டு செல்கிறது.

இந்த வளையத்துக்குள் 100 கோடி பூமிகளை அடக்கி விடலாம் என்றும் அந்த அளவுக்கு இது பிரமாண்டமாகக் காட்சி அளிக்கிறது என்றும் நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சனிக் கிரகத்தின் துணைக்கோள்களில் ஒன்றான 'போபே' இந்த வளையத்துக்குள்ளேயே வலம் வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வளையமும் 'போபே'யும் ஒரே திசையிலேயே சனியை சுற்றுகின்றன.

சனிக் கிரகத்தின் புதிய ராட்சத வளையத்தைக் கண்டுபிடித்து, புதிய சாதனை படைத்துள்ள நாஸாவின் 'ஸ்பிட்சர்' தொலைநோக்கியாவது 2003 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்டதாகும். இது பூமியில் இருந்து 10 கோடி கிலோமீற்றர் தொலைவில் சூரிய சுற்றுப்பாதையில் வலம் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகா




குழாய் மூல பயிர்ச்செய்கை


தொங்கவிடும் முறை



**பயிர்களைத் தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்க கிருமிநாசினிகள் பாவிக்கப்படுகின்றன. இதனால்,சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்க கையாளப்படும் நவீன பயிர்ச்செய்கை முறையே பாதுகாப்பான பயிரிடல் முறை எனலாம்**

சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப உணவுத்தேவையும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இதனால்,விவசாயத்தில் ஈடுபடும் நாடுகள் பயிர் உற்பத்தியில் அதிகம் கவனம் செலுத்துவது அவசியமாகின்றது.

அந்தவகையில்,அதிக விளைச் சலைப் பெற பயிர்களை நோய் களில் இருந்து பாதுகாக்கவேண் டிய தேவையும் இருக்கின்றது. இதற்காக கிருமினிநாசினிகளை அதிகம் பயன்படுத்துவதால் பலவிதமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்ப் பதற்காக நவீன பயிரிடல் முறையில் ரசாயனப் பதார்த் தங்கள் பயன்படுத்தப்படுவதும் உண்டு.இந்த ரசாயனப் பயன்பாடும் மானிட வாழ்விற்கு அதிகமான பாதிப்பை உண்டு பண்ணக்கூடியதாகும்.

இதனால், கிருமிநாசினிகள், ரசாயனப் பதார்த்தங்கள் என்பன வற்றை குறைவாகப் பயன்படுத்தி பாதிப்புக்களைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்கும் முறைகள் பற்றி விஞ்ஞானிகள் கூடிய கவனம் செலுத்தி வருகின் றனர். இதன் பலனாக 'பாதுகாப் பான பயிரிடல் முறை' என்ற புதிய சிந்தனையும் திட்டமும் அறிமுகமாகியிருக்கின்றது.

நவீன தொழில்நுட்பத்தையும் அறிவையும் பயன்படுத்தி பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும். அதேவேளை சுற்றாடலை நல்ல முறையில் பராமரித்து கிருமி நாசினிகளையும் ரசாயனப் பதார்த்தங்களையும் தவிர்க்கும் முறையே இந்த புதிய 'பாதுகாப் பான பயிரிடல் முறையாகும்'.



## பாதுகாப்பான பயிரிடலின் நன்மைகள்

- களைகளைக் கட்டுப்படுத்து வதன் அவசியம் இல்லை.
- சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படாத பயிரிடல் முறை.
- பொருளாதார ரீதியாக நன்மைகள் அதிகம்.
- மோசமான காலநிலைகளுக்கும் முகம் கொடுக்கக்கூடியது.
- பயிரிடல் முறையில் மாற்றம் செய்தாலும் பயிரில் மாற்றம் தேவைப்படுவதில்லை.

## இந்தப் பயிரிடல் முறை இரண்டு வகையாகும்

- மண் கலந்த முறை
- மண் இல்லாத முறை

## மண் கலந்த முறை

மண்ணின் மேற்பரப்பில் பயிரிடும் முறையே இந்த முறையாகும். இதில் ஏனைய கலவைகள் சேர்க்கப்பட்டாலும் அவற்றை சூழலுக்குப் பாதிப்பில்லாதவாறு மேற்கொள்ளல் முக்கியமான தாகும். அத்தோடு, வளிமண்டலத் திற்கு அச்சுறுத்தலோ, பாதிப்போ இல்லாத விதமாக ஆரோக்கிய மான முறை பின்பற்றப்படும்.

## இதில் கவனம் செலுத்தப்படும் முறைகள்

- மூடிய முறை.
- பயிர்களை வரிசையாக நடல்.
- பாதுகாப்பான உள்ளகப் பயிரிடல் முறை.

## மூடிய பயிரிடல் அல்லது மறைப்பு

பயிரிடல் மண்ணில் மேற்கொள் ளப்பட்டாலும் பயிரைச் சுற்றி மறைப்பு ஏற்படுத்தப்படும். இதன் மூலம் பல்வேறு விதமான நோய்கள் தொற்றாமல் தடுக்கலாம். பயிரை அநாவசியமான பாதிப் புக்களில் இருந்து பாதுகாக்கவும் முடியும்.

அத்தோடு, மண் அரிப்பு ஏற்படும்போது மண்ணில் உள்ள உரம்,போஷணை என்பன அரித்துச் செல்லப்படுவதையும் இத்தகைய மறைப்பு மூலம் தடுக்கமுடிகின்றது. மண்ணுக்குள் இருக்கும் நுண்ணு யிர்கள் மேல்நோக்கி வராமலும் பாதுகாக்க முடியும். இத்தகைய மறைப்பு முறையிலும் மூலகம், மூலகம் அல்லாத என்ற இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. இவை சாதாரணமாக தும்பு, தும்புச் சோறு, மரத்தூள், உமி, வைக்கோல், ஆகியனவும் மூலகம் அல்லாத மறைப்பாக பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் மூலம் மூடப்படுவ தையும் அல்லது மறைப்பதையும் கூறலாம்.

## பயிரை வரிசையாக மூடுதல்

இந்த முறை பயிர் வெளியே தெரியும் வகையில் பொலித்தீன் அல்லது பச்சை நிறத்தாலான மெல்லிய நூல் போன்ற வலை கொண்டு மறைப்பதைக் குறிக்கும். கடும் குளிர்ச்சியான அல்லது அதிக ஈரப்பதன் உள்ள பிரதேசங்களில் மண்ணின் உஷ்ண நிலையைப் பாதுகாக்க இந்த முறை பெரிதும் உதவுகின்றது. அத்துடன், ஈரளிப்புக் காரணமாக மண் வளம் குன்றுவதையும் தவிர்க்கமுடியும்.


## பாதுகாப்பான மறைக்கப்பட்ட உட்பரப்பில் பயிரிடல்

முழுமையாக மறைக்கப்பட்ட (உள்ளக) இடத்தில் மண்ணில் பயிர் செய்யும் முறை இதுவாகும். சூழலுக்கு ஏற்ற முறையில் பயிர் இசைந்து கொடுக்கப் பழகிக்கொள் ளும். இதனை 'வீட்டுக்குள் பயிரிடல்' என்றும் கூறலாம். இம் முறை மூலம் கிருமிநாசினிகளால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க முடிவதோடு, பயிர்களை நோய்கள் மற்றும் நுண்ணுயிரி களின் தாக்கத்தில் இருந்தும் பாதுகாக்க முடியும். அத்துடன், பராமரிப்பும் இலகுவான தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்பான பயிர்ச் செய்கை


மேல் நோக்கிய முறை


சாடியில் பயிர்ச் செய்கை

### மண் இல்லாமல் பயிரிடல்

இந்த பயிரிடல் முறையானது 'செயற்கை சூழலில் பயிரிடல்' எனப்படும். இந்த முறையில் பயிரை மண்ணில் பயிரிடும்போது கிடைக்கின்ற சூழ்நிலையை வேறு காரணிகளால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

மண்ணில் பயிரிடும்போது பயிருக்கு கிடைக்கும் மண்வளம், செழிப்பு, பசளை, நீர், மூலகங்கள் அனைத்தும் செயற்கை சூழல் பயிரிடலிலும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

### மண் இல்லாமல் பயிர் செய்யலாமா?

மண்ணில் இல்லாமல் செயற்கை முறையில் மேற்பரப்பில் பயிரிடும்போது பயிருக்குத் தேவைப்படும் மூலகங்கள், நீர் என்பவற்றை வழங்கும் முறையில் இரண்டு வழி முறைகள் உள்ளன.

✱ பொருட்கள் ✱ வளி

### மண் அல்லாத வேறு கனமூலங்கள்

இந்த முறையிலும் மண்ணுக்குப் பதிலாக மரத்தூள், தும்புச்சோறு, உமி, கரி, ஆகியவை பயன்படுத்த முடிந்தாலும் அவை பயிருக்குப் பயிர் வேறுபடும். மலர்ச்செய்கையின்போது விறகு எரித்த கரி பயன்படுத்தப்படும்.மரக்கறி வகைகளுக்கு தும்பு(தும்புச்சோறு) பயன்படுத்தப்படும். இத்துடன், பயிரை சாடியிலிட்டும் பயிரிடல் நடைபெற்றது.

### தும்புச்சோறு

மரக்கறி வகைகள் மற்றும் பழச் செய்கையின்போது அதிகமாக தும்புச் சோறு பயன்படுத்தப்படுகின்றது.

### தும்பு

தும்புச்சோறுக்குப் பதிலாகத் தும்பும் (தென்னை மட்டை) பயன்படுத்தப்படுகின்றது. தொங்கவிடும் சாடியில் தும்பிட்டுப் பயிரிடல் மேற்கொள்ளப்படுகின்றது. பயிருக்குத் தேவைப்படும் நீர் மற்றும் உரம் என்பன ஒரு சிறிய குழாய் வழியாகச் செலுத்தப்படும்.

### உமி, கரி பயன்படுத்தல்

சில வகையான பயிரிடலில் தும்புச் சோறுக்குப் பதிலாக விறகுக் கரி மற்றும் செங்கல் தூள் மற்றும் ஓட்டுக்கட்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. மலர்ச்சாடியில் பயிர் நடும்போது இந்த முறை பின்பற்றப்படுகின்றது. ஓகிட், அந்தூரியம் மற்றும் பயிர்களை நடும்போது இம்முறை பின்பற்றப்படுகின்றது.

### தொங்கவிடும் முறை

ஒரு மீற்றர் அளவு நீளமான சிலிண்டர் போன்ற பொலித்தீனைப் பயன்படுத்தி இவ்வகை பயிரிடல் முறையை மேற்கொள்ளலாம்.உரம் மற்றும் அனைத்துக் கலவைகளையும் குழாய் வழியாக இட்டு பயிரை அதில் நாட்டித் தொங்கவிடலாம்.

### மேல்நோக்கிய முறை

1-2 மீற்றர் நீளமான கறுப்பு நிறப் 'பொலித்தீன்' பைகளில் தும்புச் சோற்றை நிரப்பி வரிசையாக வைத்து அதில் பயிரிடும் முறை மேல் நோக்கிய முறையாகும்.

### நிலத்திற்த மேற்பரப்பில்

நிலத்திற்கு மேற்பரப்பில் கால்வாய் (கான்) போன்று வெட்டி அதற்குள் தும்புச் சோற்றை நிரப்பி பயிரிடப்படுகின்றது. இத்தகைய கால்வாய்களை செங்கட்களால் ஒழுங்கு படுத்திக்கொள்ளமுடியும். இவ்வாறு செய்யும்போது 'பொலித்தீன்' மூலம் மூடிவைக்க வேண்டும்.

### சாடியில்

மண், சீமெந்து, பிளாஸ்டிக் சாடிகளில் பயிரிடல் முறை இதுவாகும். சாடி எந்த வடிவிலும் அமையலாம். பயிரின் தன்மைக்கு ஏற்ப சாடி வேறுபடலாம்.

### மண் அல்லாத திண்மப் பொருட்கள் மீது பயிரிடல்

இந்த முறையிலான பயிர்ச் செய்கைக்கு நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. பயிரின் தேவைக்கு ஏற்ப நீரில் கலக்கப்பட்ட உரம் மூலம் பயிரிற்குரிய போஷணை பெற்றுக்கொடுக்கப்படும். இந்த முறை மூலம் அதிகூடிய விளைச்சலைப் பெற முடிந்தாலும் பயிர்ச்செய்கைக்கு செலவு அதிகமாகும்.

### முக்கியமான முறைகள்

- ✱ உரக்கலவையில் உள்ள நீரை தொடர்ச்சியாக கிடைக்கும் வகையில் பயிரிடல்.
- ✱ உரக்கலவையில் உள்ள நீர் உறிஞ்சப்படாத விதமாக பயிரிடல்.
- ✱ உரம் கலக்கப்பட்ட மெல்லிய பலகை அல்லது மேற்பரப் பொன்றில் பயிரிடல்.

இந்த முறைப்பயிர்ச்செய்கைக்காக 4 அங்குலம் அகலமான குழாயைப் பயன்படுத்தலாம். இதில் உரம் கலந்த கலவை உள்ள குழாய் வேறாகவும் நாற்று நாட்ட குழாய் வேறாகவும் ஒன்றுடன் ஒன்று ஓரளவுக்கு உராய்ந்ததாக வைக்கவேண்டும். உரம் உள்ள குழாயில் இருந்து வடிந்து செல்லும் வகையில் நாற்று உள்ள குழாய் வைக்கப்படும். நாற்றின் வேர் ஊடாக உரம் உறிஞ்சி எடுக்கப்பட்டு பயிர் செழித்து வளர வழி ஏற்படுகின்றது. இந்த முறை மூலம் உரத்தில் உள்ள முழுமையான பசளை வீணாகாமல் பயிர் செழிப்பாக வளரப் பயன்படுகின்றது.

### உரம் கலந்த ஆழமான நீர் வடிகால் பயிரிடல் முறை

பயிரின் வேர்ப்பகுதி உரம் கலந்த நீர்க் கலவையில் மிதந்தவண்ணம் இருக்கும். இதற்கு 10 செ.மீற்றர் அளவான குழாய் பயன்படுத்தப்படும். 2-3 செ.மீ அளவு உயரம் உள்ள குழாய் உரம் சேமிப்பதற்கு நிறுத்தி வைக்கப்படும். மற்றக் குழாயில் துளைகளுக்குள் நாற்று நடப்படும்.

### உருக்குலையாத உரப்பாவனையில் பயிரிடல்

உரம் கலந்த நீர் உலர்ந்து விடாத முறையில் ஒரு முறை மட்டும் உரம் பயன்படுத்தும் முறையில் அமைத்தல். இங்கு 'கொங்ரீட்' இட்டு சதுர வடிவிலான அமைப்பில் அல்லது பிளாஸ்டிக் பாத்திரங்களில் நாற்று நடப்படும். இம்முறையிலும் உரத்தின் வளம் குன்றாமல் பாதுகாக்கப்படும். ஒரே இடத்தில் இருந்து உரத்தில் உள்ள போஷணை பயிருக்குத் தேவையான அளவு வடிந்து சென்று செழிப்பை ஏற்படுத்தும்.

### வளி மூலம் போஷணை ஊட்டல்

இந்த முறையில் உலோகத் தட்டில் நடப்பட்டுள்ள பயிரின் வேர் தேவையான படி சுதந்திரமாக வெளியே பரவும். வேருக்குத் தேவைக்கதிகமாக ஒளிபடுவதைத் தடுக்க மறைப்பு பயன்படுத்தப்படும். உரத்தில் உள்ள போஷணை தாவரத்தின் வேருக்கு செலுத்தப்படும். இம்முறையும் உரத்தை ஒழுங்காகப் பயன்படுத்தி சிறந்த பிரதிபலனை நோக்கிய பயிரிடல் முறையாகும்.

இவ்வாறாக நவீன பயிரிடல் முறைகள் மூலம் மண் அல்லாத இடங்களிலும் மேற்பரப்பை செயற்கை முறையாக ஒழுங்கு படுத்தி பயிரிடல்களை மேற்கொள்ளலாம். இம்முறைகளால் உரம் வீண் விரயமாவது தடுக்கப்படுவதோடு, கிடைக்கின்ற இடவசதியில் உச்சப் பயன் அடையும் விதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியும்.

**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி சுல்தான்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

## துக்ளக் மரபு

**கியாசுத்தீன் துக்ளக்:**
இவர்தான் 'துக்ளக்' மரபைத் தோற்றுவித்தவர். இவருடைய தந்தை ஒரு துருக்கியர். தாய் பஞ்சாபைச் சேர்ந்தவர். கியாசுத்தீனின் ஆட்சிக்காலத்தில் விவசாயத்தில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இவரது மகன் முகமது பின் துக்ளக் தனது தந்தையைக் கொன்று விட்டு நாட்டின் சுல்தானானார்.

**முகமது பின் துக்ளக்:**
இவர் 26 ஆண்டுகள் ஆட்சி செய்தார். 'துக்ளக்' மரபில் குறிப் பிடத்தக்கவராகத் திகழ்ந்த இவர், சிறந்த கல்விமானாவார். கணிதம், வானியல், மருத்துவம் போன்ற துறைகளில் வல்லவராவார். இவர் அபாரமான நினைவுத் திறன் படைத்தவராகக் காணப்பட்டுள் ளார். பிற சமயங்களையும் மதிக்கும் மனப்பாங்குடையவராகவும் இதன்போது புழக்கத்திலிருந்தன. முகமது பின் துக்ளக்கிடம் பல நற்குணங்கள் இருந்தாலும், அவரின் தவறான அணுகு முறைகளால் பல தோல்விகளைத் தழுவ வேண்டியும் ஏற்பட்டுள்ளன.

**பெரோஸ் துக்ளக்:**
முகமது பின் துக்ளக் இறந்த பின்னர், கி.பி 1351 இல் பெரோஸ் துக்ளக் டில்லியின் சுல்தானாகப் பதவி யேற்றார். இவர் கியாசுத்தீனின் இளைய சகோதரர் ஆவார். இவருடைய ஆட்சிக்காலம் அமைதியானதாகவும் வளம் நிறைந்ததாகவும் அமைந்தது. இவர் மக்கள் நலனுக்காகப் பாடுபட்டார்.

விவசாயத்துக்காக பல சேவைகளை செய்துள்ளார். விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளார். கடுமையான தண்டனை களையும் ஆட்சிபீடம் அமர்ந்தவர்கள் வலிமை மிக்கவர்களாக இருக்கவில்லை. இதனால், துருக்கிய தைமூரின் படையெடுப்பின் பின்னர் 'துக்ளக்' மரபு சிதறுண்டு போனது.

## செய்யத் மரபு

இம்மரபு கிஸர்கான் என்ற சுல்தானால் தோற்றுவிக்கப்பட்டது.


இப்றாஹிம் லோதி
மன்னர் தைமூர்

ஊக்குவித்தார். மக்களின் பொருளா தார மேம்பாட்டுக்கு வழி வகைகள் செய்தார். 'லோதி' மரபின் சிறந்த அரசராக இவர் கருதப்படுகின்றார்.


**இப்றாஹிம் லோதி:**
சிக்கந்தர் லோதியின் மகனான இவர், அவரின் மறைவுக்குப் பின் அரசரானார். இவருடைய காலத்தில் நாட்டின் பல பாகங்களிலும் கலகம் ஏற்பட்டது. லோதியின் கீழ் பணி புரிந்த தௌலத் கான் என்ற ஆப்கா னியப் பிரபு ஒருவர் ஆப்கானிஸ் தானிய அரசர் பாபர் என்பவரை இந்தியா மீது படையெடுத்து வருமாறு அழைப்பு விடுத்தார். எனவே, கி.பி 1526 இல் பாபர், இந்தியா மீது படையெடுத்து 'முகலாய' ஆட்சியை நிறுவினார்.

## சுல்தானியர் கால சிறப்புக்கள்

**படையமைப்புக்கள்:** டில்லி சுல்தான் களின் படையில் குதிரைப்படை, காலாட்படை, யானைப்படை என பல படைப்பிரிவுகள் மேய்ச்சல் வரி, இந்துக்களிட மிருந்து ஜெசியா வரி என்பனவும் அறவிடப்பட்டன. இவ்வரிகள் படைகள், பொதுமக்களின் நன்மை, அரண்மனை பராமரிப்பு, ஆட்சி நிர்வாகம், நீர்ப்பா சனம், சாலை அமைப்பு மற்றும் சமூக சேவை போன்ற வற்றுக்காக செலவிடப்பட் டுள்ளன.

**பொருளாதார நிலை:** நீண்ட கால்வாய்களும் குளங்களும் வெட்டப்பட்டு பரந்த நிலப் பரப்புக்களில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வந்துள் ளது. இலவச மருத்துவசாலை களும் பயணிகள் விடுதி களும் கட்டப்பட்டுள்ளன. வேலைத்திறன் மிக்க கலைஞர்கள் அரசருக்கும் பிரபுக்களுக்கும் மிக நேர்த்தியான கைவினைப் பொருட்களை


பெரோஸாபாத்


தௌலதாபாத் கோட்டை இடிபாடுகள்

காணப்பட்டுள்ளார். இவரால் ஏற்படுத்தப்பட்ட சில சீர்திருத் தங்கள் பிற்காலத்தில் இவருக்கே பல தீய விளைவுகளை ஏற்படுத்தின. முகமது பின் துக்ளக்கால் அறிமுகப் படுத்தப்பட்ட வரி விதிப்புக் கொள்கையால் மக்கள் துன்பத்துக் குள்ளாகினர்.

மொங்கோலியப் படையெடுப்பி லிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள தலைநகரை நாட்டின் மத்திய பகுதிக்கு மாற்றினார். அதன்படி, தேவகிரி 1327 ஆம் ஆண்டு இவரால் தலைநகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.இவருடைய காலத்தில் ஏற்பட்ட போர்களால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமானதால் நாட்டில் நாணயங்களையும் வெளியிட்டுள்ளார். கள்ள நாணயங்களும்


கியாசுத்தீன் துக்ளக்கின் கல்லறை அமைந்துள்ள இடம்

நீக்கியுள்ளார். வேலை வாய்ப்பு வழங்குவதற்காக வேலை வாய்ப்பு அமைப்பு ஒன்றும் ஏற்படுத் தப்பட்டது. வயதானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இலவச சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகள் இவரால் அமைக்கப்பட்டன. ஏராள மான கல்லூரிகளும் பள்ளிகளும் திறக்கப்பட்டன. புதிய நகரங்கள் பலவும் நிர்மாணிக்கப்பட்டன. 'பெரோஸாபாத்' அவற்றில் முக்கிய மானதாகும். எனினும், இவருடைய இறுதிக்காலம் அமைதியானதாக இருக்கவில்லை. இவருக்குப் பிறகு

இவர் தைமூரினால் பஞ்சாபின் ஆளுனராக நியமிக்கப்பட்டவராவார். இவர் செய்யத் இனத்தைச் சேர்ந்தவ ராக இருந்ததால், இவரால் தோற்று விக்கப்பட்ட மரபு 'செய்யத் மரபு' எனப்படுகின்றது. முபாரக் ஷா, முகமது ஷா, ஆலம் ஷா போன்ற வர்கள் செய்யத் மரபில் குறிப்பிடத் தக்க சுல்தான்கள் ஆவார்கள்.


## லோதி (லோடி) மரபு

பஹ்லுல் லோதி, பஞ்சாபை ஆட்சி செய்த ஓர் ஆப்கானியர். இவர் பின்னர் டில்லியைக் கைப்பற்றினார். இவருக்கு பின் இவரது மகன் சிக்கந்தர் லோதி அரசரானார்.

**தரம்-10 பாடத்திட்டத்திற்கு உட்பட்டது**

**சிக்கந்தர் லோதி:**
தன் தந்தையைப் போலவே திறமையும் வலிமையும் உடைய வராகத் திகழ்ந்தார். தன் தலைநக ரத்தை டில்லியிலிருந்து ஆக்ராவுக்கு [illegible]

காணப்பட்டுள்ளன. குதிரைகள் ஆப்கானிஸ்தானிலிருந்தும் துருக்கியி லிருந்தும் கொண்டுவரப்பட்டன. குதிரைகள் மீது முத்திரை போடும்




வழக்கமும் காணப்பட்டுள்ளது. இதனால், சிறந்த அரச குதிரைகளைத் திருடி, அதற்குப் பதிலாக பயனற்ற குதிரைகளை மாற்றி வைக்கும் செயல் தடுக்கப்பட்டது.

**வரி முறைகள்:** அரசின் முக்கிய வருமானம் நிலங்களின் மூலம் கிடைத்தது. இதைத்தவிர, வீட்டுவரி,

உற்பத்தி செய்து வழங்கியுள் ளனர். பல நகரங்கள் வியாபா ரத் தலங்களாக மாறின. உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் மேம்பட்டுக் காணப்பட்டுள்ளது. காம்பே மற்றும் சூரத் ஆகிய நகரங்கள் ஐரோப்பா மற்றும் மத்திய ஆசிய நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகளை மேற்கொண்டுள்ளன. வங்காளம், குஜராத் ஆகிய பகுதிகளிலிருந்து பருத்தி மற்றும் நூலாடைகள்

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை வெல்லும் சிறுவர்கள் பரிசளிப்பு விழாவின் போது...















கல்வி அமைச்சு

கல்வி அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் 'ஹற்றன் நெஷனல் வங்கி'யினால் (HNB) இரண்டாவது தடவையாகவும் நடத்தப்பட்ட 'லொவ தினன சிங்கித்தோ' (உலகை வெல்லும் சிறுவர்கள்) எனும் தலைப்பின் கீழான போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை வழங்கும் விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி, பரிசளிப்பு விழாவில் ஹற்றன் நெஷனல் வங்கியில் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று பணிப்பாளருமான இராஜேந்திரா தியாகராஜா மற்றும் கௌரவ அதிதியாக கல்வி அமைச்சரின் சார்பாக அவரது பிரத்தியேக செயலாளர் பிரேமசெர எப்பாசிங்ஹவும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் பலவும் மேற்படி விழாவில் நடைபெற்றன. நாடகம், கட்டுரை, பாடல், சித்திரம், சிறுகதை ஆகிய அம்சங்களில் சிறந்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. நாடளாவிய ரீதியில் 9,800 இற்கும் அதிகமான பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டிருந்தனர். பத்திரிகைக்கான ஊடக அனுசரணையை 'விஜய்', 'விஜய' பத்திரிகைகள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**படப்பிடிப்பு: ஷெஹான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நாடு:** சீனக் குடியரசு (பொதுவாக 'தாய்வான்' என அழைக்கப்படுகின்றது; **தேசிய பெயர்:** Zhonghua Minguo.
**அரசு:** இரு சட்ட சபைகளைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.
**அதிபர்** (2008): மா யிங்-ஜியூ.
**பிரதமர்** (2009) வு டென்-யிஹ்.

## புவியியல்

ஆசிய பெரு நிலப்பரப்பில் இருந்து 100 மைல் (161 கி.மீற்றர்) தூரத்தில் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுக்கூட்டமே தாய்வான் ஆகும். இந்நாட்டிற்கு 'ஃபோர்மோஸா' என்றொரு பெயரும் இருந்தது. கின்மென் மற்றும் மெட்சு ஆகிய இரு பிரதான தீவுகளையும் வேறு சில சிறிய தீவுகளையும் கொண்டது. அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மற்றும் கொனட்டிக் கட் ஆகிய மாநிலங்களைவிட ஒப்பீட்டு ரீதியில் சற்றுப் பெரியது.

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி மலைத்தொடர்களைக் கொண்டது. பல மாறுபட்ட புவி அமைப்புகளைக்கொண்ட நாடுதான் தாய்வான். அடிக்கடி பூமியதிர்ச்சிக்கும் உட்படுகின்றது. எண்ணற்ற வெந்நீர் ஊற்றுக்களை இங்கு காணலாம். நாட்டின் மத்திய மலைப்பகுதியில் இருந்து ஏறக்குறைய 150 ஆறுகளுக்கு மேல் கடலை நோக்கிப் பாய்கின்றன. அவற்றுள் சுவோஷுய், காவோபிங் என்பன பிரசித்தி பெற்ற ஆறுகளாகும்.

**அமைவிடம்: வடக்கு**-கிழக்கு சீனக்கடல்; **கிழக்கு** - பசுபிக் சமுத்திரம்; **மேற்கு**-தாய்வான் நீரிணை; **தெற்கு**-லுசோன் நீரிணை. **மொத்தப் பரப்பு:** 13,892 சதுர மைல் (35,980 சதுர கி.மீ); **நிலப்பரப்பு:**12,456 சதுர மைல் (32,261 சதுர கி.மீ). **நிலப்பிரிவுகள்:** 18 மாகாணங்கள்; 5 மாநகர சபைகள்; 3 விசேட மாநகரங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** தாய்பே. **ஏனைய பெரிய நகரங்கள்:** கோசியுங், தாய் சங், தாய்னன், கீனுங். **உயர்ந்த சிகரம்:** யு ஷான் - 12966 அடி (3952 மீற்றர்). **மிகத் தாழ்ந்த மையம்:** தென் சீனக் கடல்.

**மக்கள் தொகை** (2009): 22,974,347.
**தேசிய இனம்:** தாய்வானியர் அல்லது சீனர் அல்லது இரண்டும்.
**இனங்கள்:** தாய்வானியர் (ஹக்கா உள்ளிட்ட) 84%, சீனர் 14%, எபோரிஜின் 2%.
**மதங்கள்:** பௌத்தம், கொன்ஃபியூசியன் மற்றும் தாவோயிஸ்ட் மொத்த வீதம் 93%,கிறிஸ்தவம் 4.5%, ஏனையோர் 2.5%.
**மொழிகள்:** சீனமொழி (மெண்டரின்-உத்தியோகபூர்வ மொழி), தாய்வானிஸ், ஹக்கா மொழி வழக்குகள்.
**நாணயம்:** தாய்வான் டொலர். **எழுத்தறிவு** (2003): 96.1%.
**சர்வதேச தொலைபேசிக் குறியீடு:** 886 **இணையத்தளக் குறியீடு:** .tw
**தேசிய சின்னங்கள்: மலர்** - Plum blossom, **மிருகம்** - Formosan Black Bear, **பறவை** - Formosan Blue Magpie, (மரம், விளையாட்டு என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை).

## தேசிய கீதம்

San-min-chu-i, Wu-tang so tsung;
i-chien min-kuo, i-chin ta-t'ung.
Tzu erh to-shih, wei min ch'ien-feng;
su-yeh fei-hsieh, chu-i shih ts'ung... என ஆரம்பிக்கின்றது.

## வரலாறு

சீனர்களின் வருகையுடன் 7 ஆம் நூற்றாண்டு வரை தாய்வான் நாடானது 'எபோரிஜின்' எனப்படும் மலாயன் ஆதிவாசிகளின்


தாய்பே நகர்


தேசிய மாளிகை அருங்காட்சியகம்

இருப்பிடமாக இருந்தது.1590 இல் இப்பிரதேசத்தை போர்த்துக்கேயர் கைப்பற்றினர். அந்நாட்டின் இயற்கை அழகைக் கண்டு 'அழகிய நாடு' என்று அர்த்தப்படும் விதத்தில் 'ஃபோர்மோஸா' எனப் பெயரிட்டனர். இவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர், ஸ்பானியர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. 1661 இல் சீன சுதந்திர அரசில் இணைந்தது. எனினும் பின்னர் ஜப்பானின் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டு இரண்டாம் உலக யுத்தத்தின்பின் மீண்டும் சீனாவின் ஒரு பகுதியானது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2000): **பிரதான தொலைபேசிப்பாவனையாளர்கள்:** 12.49 மில்லியன்; **செல்லிடத் தொலைபேசி:** 16 மில்லியன்.


சிங்கத்தலைக் குன்று


சூரிய-சந்திர ஏரி

**வானொலி நிலையங்கள்** (1999): AM 218,FM 333, SW 50. **தொலைக்காட்சி நிலையங்கள்:** 29. **இணையத்தள வழங்குனர்கள்** (2000): 8. **இணையத்தள பாவனையாளர்கள்** (2001): 11.6 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் போக்குவரத்து:** 1108 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** 35931 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** சி-லுங்(கீலுங்), ஹுவாலீன், காவோ-சியுங் சு-ஆவோ, தாய் சங். **விமான நிலையங்கள்** (2002): 39.

## காலநிலை

இடைவெப்ப வலயக் காலநிலை நிலவுகின்றது. கோடை மற்றும் இலையுதிர்காலத்தில் காலநிலை பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். கோடைகாலமாகிய ஜூன் முதல் ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் வெப்பநிலையானது 80°F அளவிலும் அதுவே மாரிகாலத்தில் 55°F வரையும் குறைவடையும். உயர்ந்த மலைப்பிரதேசங்களில் மாரிகாலத்தில் பனி வீழ்ச்சி காணப்படும்.

## கலாசாரம்

மாறுபட்ட ஒரு கலப்பின கலாசாரம் காணப்படுகின்றது. கொன்ஃபியூசினியனிஸ்ட் ஹேன், சீன, ஜப்பானிய, ஐரோப்பிய, அமெரிக்க, தாய்வானிய ஆதிவாசிகளான எபோரிஜின்ஸ் ஆகியவற்றின் பன்முக கலாசாரங்களின் தாக்கங்களுக்கு தாய்வானிய கலாசாரம் உட்பட்டது. தவிர, பாரம்பரிய மற்றும் நவீன கலாசார விளைவுகளை உள்வாங்கவும் செய்கின்றது.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கைக்குரிய நிலம்-24%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நெல், சோளம், காய்கறிகள், பழவகைகள், தேயிலை, பன்றி, கோழிப்பண்ணை, இறைச்சி, முட்டை, மீன் என்பன. **தொழிலாளர் தொகை:** 10.78 மில்லியன் (விவசாயம் 5.3%, கைத்தொழில் 36.8%, சேவைகள் 57.9%). **வேலையற்றோர்:** 3.9%. **கைத்தொழில்கள்:** பெற்றோலிய சுத்திகரிப்பு, ரசாயனப் பொருட்கள், புடவைகள், இரும்பு மற்றும் இரும்புருக்கு, இயந்திரங்கள், சீமெந்து, உணவுற்பத்திகள், வாகனங்கள், மருத்துவப் பொருட்கள். **இயற்கை வளங்கள்:** சிறியளவில் நிலக்கரி, இயற்கை வாயு, பளிங்கு, விலைமதிப்பான கற்கள். **ஏற்றுமதிகள்:** கணினியும் அது சார்ந்த உதிரிப்பாகங்களும், புடவைகள், பிளாஸ்டிக் உட்பட றப்பர் உற்பத்திப் பொருட்கள், ரசாயனப் பொருட்கள். **இறக்குமதிகள்:** இயந்திர மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள், கனியங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** சீனா, ஐக்கிய அமெரிக்கா, ஹொங்கொங், ஜப்பான், தென் கொரியா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...


* சிங்கத்தலைக் குன்று * தேசிய மாளிகை அருங்காட்சியகம் * சூரிய-சந்திர ஏரி * சுங்லுன்யன் நீர்வீழ்ச்சி * லங்ஷன் கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் - 2009

## இவ்வாண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாளின் ஒரு பகுதி

* ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையை, தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.
* முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.

01. 


02. 


* ஒவ்வொரு கவிதையிலும் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

03. பூ விரிகின்றது
மணம் வீசுகின்றது
பூ வாடுகின்றது
இதழ் ........................
(1) ஆடுகின்றது (2) விழுகின்றது (3) பறக்கின்றது

04. பிள்ளைகளின் கூட்டம்
இருக்கும் இடம்
பூக்கள் ஆயிரம்
மலர்ந்த ......................
(1) தளம் (2) களம் (3) குளம்

* தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

05. 


06. 


* பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

07. வண்ணத்துப்பூச்சி ரோஜா மலரில் நீரைக் குடிக்கின்றது.
(1) வண்ணத்துப்பூச்சி என்பதற்குப் பதிலாகக் 'குளவி' என்பதை இடுதல்.
(2) ரோஜா என்பதற்குப் பதிலாக 'தாமரை' என்பதை இடுதல்.
(3) நீரை என்பதற்குப் பதிலாக 'தேனை' இடுதல்.

08. பிள்ளை வீதியில் பாடம் படிக்கின்றது.
(1) பிள்ளை என்பதற்குப் பதிலாக 'மகன்' என்பதை இடுதல்.
(2) வீதியில் என்பதற்குப் பதிலாக 'அறையில்' என்பதை இடுதல்.
(3) பாடம் படிக்கின்றது என்பதற்குப் பதிலாக 'ஆரம்பிக்கின்றது' என்பதை இடுதல்.

* கூடுகளினுள்ளே பந்துகள் இடப்பட்டுள்ள விதத்திற்கேற்ப வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

09. 

10. 

* ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 16 சதுரங்களைப் பின்வரும் உரு கொண்டுள்ளது.



11. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?
(1) 8 (2) 10 (3) 12

12. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவில் என்ன பின்னம்?
(1) 1/4 (2) 1/2 (3) 3/4

* உருவில் காணப்படும் வடிவம் உள்ள தாளை முதலில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து, இரு பக்கங்களையும் சேர்த்துப் புள்ளிக்கோடுகள் வழியே வெட்டிய பின்னர், கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கையும் நாற்பக்கங்களின் எண்ணிக்கையும் முறையே யாவை?


13. 

(1) 4 உம் 2 உம்
(2) 3 உம் 1 உம்
(3) 2 உம் 2 உம்

14. 


(1) 3 உம் 1 உம் (2) 3 உம் 2 உம்
(3) 4 உம் 2 உம்

* கோலத்திற்கேற்ப அடுத்துவரும் பொருத்தமான உரு 1, 2, 3 ஆகியவற்றிடையே யாது?

15. 

16. 

17. வெற்றிடத்திற்குப் பொருத்தமான உரு யாது?



* △+△ = 24, □-5 = △ □+△ = ⬠

18. □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?
(1) 12 (2) 17 (3) 29

19. △+□+⬠ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?
(1) 17 (2) 29 (3) 58

20. இலக்கங்களாக உள்ள சில்லு, நேர்கோடு வழியே முன்னோக்கி உருளும்போது சந்திக்கும் குறி இடப்பட்டுள்ள கூடுகளுக்குப் பொருத்தமான எண்கள் முறையே;



(1) 2, 9 ஆகும்.
(2) 3, 2 ஆகும்.
(3) 3, 9 ஆகும்.

21. முரளி, ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதேவேளை, ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன், ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை, முரளிக்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?
(1) மோகன் (2) முரளி (3) ரவி

22. தந்தையார் மாம்பழத்தையும் அன்னாசிப்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம்பழத்தை விரும்புவதில்லை. தாயார் தோடம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்றபோதிலும் அன்னாசிப்பழத்தை விரும்புவதில்லை. நான் விளாம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்றேன். நாம் மூவரும் விரும்பும் பழம்;
(1) விளாம்பழம் (2) தோடம்பழம் (3) மாம்பழம்

23. தாயார் ஒருவர் தன்னிடத்தில் இருந்த பணத்தில் 1/2 ஐப் புத்தகங்கள் வாங்கச் செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து, அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூ.50 எனின், அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் யாது?
(1) ரூ.50 (2) ரூ.100 (3) ரூ.200

**மிகுதி வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் அடுத்த இதழில் வெளிவரும்**

### புலமைப்பரிசில் பரீட்சை விடைகள் - 2009

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01) 2 | (02) 1 | (03) 2 | (04) 3 | (05) 2 | (06) 2 | |
| (07) 3 | (08) 2 | (09) 3 | (10) 2 | (11) 1 | (12) 2 | |
| (13) 3 | (14) 1 | (15) 3 | | | | |
| (16) எல்லா விடைகளும் சரி எனக் கொள்க. | | | | | | |
| (17) 3 | (18) 2 | (19) 3 | (20) 1 | (21) 2 | (22) 3 | (23) 2 |

தரம் 4 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் 5 இன் விடைகள் 15 ஆம் பக்கத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இருந்து உலகின் சக்தி வலுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பிரதான சக்தி வளமாகத் திகழ்வது கனிய எண்ணெய் ஆகும். அது இன்று உலகின் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளிலும்கூட பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வரும் ஒரு வளமாகத் திகழ்கின்றது. இந்த வளத்திற்கு உலகில் சில நாடுகள் மாத்திரமே உரிமை கோரி வருகின்றன. வரையறுக்கப்படாத பாவனையுடையதும் மீளுருவாக்கம் இல்லாத சக்தி முதலாகவும் கனிய எண்ணெய் திகழ்வதால், இன்று இதுவொரு வரையறுக்கப்பட்ட வளமாகவே கணிக்கப்படுகின்றது. இதனால், அதன் பெறுமதியும் உயர்ந்துள்ளது. நாளுக்கு நாள் இதன் விலை அதிகரித்துச் செல்வதால் ஏனைய பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் விலையும் அதிகரிக்கின்றது

# கனிய எண்ணெய்:

## கனிய எண்ணெய் பாவனையின் ஆரம்பம்

'பாறை' எனும் அர்த்தத்தை உடைய 'பெற்றோல்' (Petrol) எனும் கிரேக்க சொல்லும் 'எண்ணெய்' என்று அர்த்தப்படுகின்ற 'ஓலியம்' (Oleum) எனும் ரோமானியச் சொல்லும் இணைந்தே 'பெற்றோலியம்' அல்லது 'கனிய எண்ணெய்' எனும் பெயர் வந்தது. இந்த வளமானது தரையின் கீழ் பாறைகளுக்கிடையே சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யாக (மசகு எண்ணெய்) தேங்கி இருக்கின்றது.

இற்றைக்கு ஏறக்குறைய 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மசகு எண்ணெய்யைப் பற்றி மக்கள் அறிந்திருந்தனர். அந்த வகையில், இந்தியர்கள் புவிப் பிளவுகளின் மூலம் தரையின் மேற்பகுதியில் மசகு எண்ணெய் கசியும் இடங்களில் தீபம் ஏற்றி, அவ்விடத்தைச் சுற்றி வணங்கி ஆராதித்தனர். இன்னும் சில பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தொண்டை சம்பந்தமான நோய்களுக்கும் தோல் வியாதிகளுக்கும் மிகச் சிறந்தது எனக் கூறி, இந்த மசகு எண்ணெய்யை வேறு தாவரச்சாறுகளுடன் கலந்து, தைலமாகப் பயன்படுத்தினர். இதுதவிர, எதிரியின் தலையில் சிறிது சூடாக்கிய கனிய எண்ணெய்யை பூசுவதன் மூலம் அந்நபருக்கு தீங்கு விளைவிக்கலாம் என அக்காலத்தில் நம்பிக்கை ஒன்றும் நிலவியது.

## கனிய எண்ணெய் என்றால் என்ன?

கனிய எண்ணெய் என்பது உயிர்ச் சுவட்டு எரிபொருளாகும். நிலையான பாறைப் படிவுகளுடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் மசகு எண்ணெய்யானது படிமங்களாகக் காணப்படும். கனிய எண்ணெய் தவிர, நிலக்கரி மற்றும் இயற்கை வாயு என்பனவும் உயிர்ச் சுவட்டு எரிபொருள் வரிசையில் அடங்கும். மசகு எண்ணெய்யில் பிரதான மூலப்பொருட்கள் இரண்டு அடங்கியுள்ளன. அவை; ஐதரசன், காபன் என்பனவாகும். எனவே, இதனை ஹைட்ரோ காபன் சேர்வை என அழைக்கின்றனர்.

## கனிய எண்ணெய் உருவாகிய விதம்

இற்றைக்கு ஏறக்குறைய 300 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் புவியில் இருந்த தாவரங்கள் மற்றும் மிருகங்கள் உள்ளிட்ட உயிரினங்கள் மூலமே உயிர்ச்சுவட்டு எரிபொருள் உருவாகியுள்ளது. அழிந்து போன தாவரங்களினதும் மிருகங்களினதும் பகுதிகள் நிலத்துக்கடியில் தேங்கிப் பின்னர், நிரந்தரமாக அழுத்தத்திற்குட்பட்டு வெப்பம் மற்றும் பக்றீரியா செயற்பாட்டிற்கும் இலக்காகியது. இந்த உயிர்த்திரவமானது நீண்டகாலமாக பாறைப்படிவுகளால் மூடப்பட்டுள்ளது. இவ்வாறு பன்னெடுங்காலமாக இத்தாவர மற்றும் விலங்குகளின் உடற்கூறுகள் பௌதிக மற்றும் ரசாயன செயற்பாட்டிற்கு இலக்காகி உயிர்ச்சுவட்டு எரிபொருள் உருவாகியது. அதுவே நாளடைவில் புவி மண்டலத்தின் பலவீனமான மற்றும் பிளவுகள் உள்ள இடங்களின் வழியாக கனிய எண்ணெய் புவியின் மேற்பரப்பிற்கு வருகின்றது.



எண்ணெய்க் கிணறு ஒன்றின் தோற்றம்

## முதலாவது கண்டுபிடிப்பு

1859 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் பென்சில்வேனியா எனும் இடத்தில் வாழ்ந்த அலெக்ஸாண்டர் கிரேக் எனும் ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர் ஒருவரால்தான் முதன்முதலாக மசகு எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் 6 அடி ஆழமான கிணறு தோண்டி, நாளொன்றிற்கு 20 (பெரல்) பீப்பாய் மசகு எண்ணெய்யைப் பெற்றதாக உத்தியோகபூர்வ குறிப்புகள் தெரிவிக்கின்றன. இரண்டாம் உலக யுத்த காலத்தில் அது 4 லட்சம் மில்லியன் பீப்பாய்களாக அதிகரித்தது.


கனிய எண்ணெய் உருவாவதற்கு பல நூறு மில்லியன் ஆண்டுகள் எடுப்பதாலும் அது மீளுருவாக்க வளமாக இல்லாதிருப்பதாலும் இதன் கேள்வி நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே இருக்கின்றது. இதனால், மசகு எண்ணெய்யின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதோடு, தற்போது உலகம் முழுவதும் அதனைத் தேடி மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இன்று உலகின் நிலப்பகுதியில் மாத்திரமல்ல; சமுத்திரங்களிலும் கனிய எண்ணெய் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையிலும் மேற்கு, தெற்குப் பிரதேசங்களில் உள்ள கடலுக்கடியிலும் கனிய எண்ணெய்ப் படிமங்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது.

## மசகு எண்ணெய் அகழ்வு

ஆய்வாளர்கள் எண்ணெய் வளம் இருக்குமிடத்தை கண்டுபிடித்த பின்னர் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. பின்னர் குழாய் வழியாக எண்ணெய் மேல்நோக்கி பம்ப் செய்யப்படும். அதன்பின் அந்த மசகு எண்ணெய்யில் உள்ள நீர் அகற்றப்பட்டு, சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது. அந்தவகையில், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய்யானது கொழும்பு துறைமுகத்திற்கருகில் உள்ள நிலையமொன்றில் இருந்து குழாய் வழியாக சபுகஸ்கந்தை எண்ணெய்

## எண்ணெய்ப் படிமங்களின் மாதிரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையறுக்கப்பட்ட ஒரு வளம்


மசகு எண்ணெய்


உலகில் கனிய எண்ணெய்ப் பரம்பல்

சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது.

## மசகு எண்ணெய் சுத்திகரிப்பு

மசகு எண்ணெய்யானது ஹைட்ரோ காபனின் கூட்டாகும். மசகு எண்ணெய் சுத்திகரிப்பின்போது அது கனிய வாயு, பெற்றோல், மண்ணெண்ணெய் என ஒவ்வொன்றாக வேறுபடுத்தப்படும். இதற்காக காய்ச்சி வடிக்கும் தூணை பயன்படுத்துவர். அதில் மசகு எண்ணெய் அதிகளவு வெப்பத்திற்கு உட்படுத்தப்பட்டு, அந்தந்த ஹைட்ரோகாபன்களில் ஆவியாக்கும் நிலைக்கு உட்படுத்தப்படுகின்றது. பின்னர் அந்த ஆவியானது குளிர்ச்சியடையச் செய்யப்பட்டு, திரவ நிலையை அடைகின்றது. இந்த அனைத்து செயற்பாடுகளும் வடிக்கும் தூணிலேயே நடைபெறுகின்றன.

இலங்கையில் சப்புகஸ்கந்தையில் சுத்திகரிக்கப்பட்ட கனிய எண்ணெய்யானது கொலன்னாவை விநியோக மத்திய நிலையத்திற்கு குழாய் வழியாகக் கொண்டுசெல்லப்படுகின்றது. அதன் பிறகே விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் பின்னர் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

உலகின் முழு கனிய எண்ணெய் இருப்பு




## கனிய எண்ணெய் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்


**சக்தி வலுவாக:**

- வாகன எரிபொருளாக.
- கைத்தொழிற்சாலைகளில் இயந்திரங்களை இயக்குவதற்காக.
- விமானங்கள், கப்பல் போன்றவற்றிற்கு தேவையான எரிபொருளாக.
- மின்சக்தி உற்பத்திக்காக.

**மூலப் பொருளாக:**

- வாசனைப் பூச்சாகவும் பல்வேறு பூச்சுத் தேவைகளுக்காக.
- மருந்து தயாரிப்பதற்காக.
- பிளாஸ்டிக் உற்பத்திக்காக.
- புடவை வகைகளை உற்பத்தி செய்வதற்கு.
- L.P வாயு மற்றும் இலகு டீசல் தயாரிப்புக்கு.
- எரிப்பதற்குரிய எண்ணெய்யாக.

## மசகு எண்ணெய் சுத்திகரிப்பு




### ஓர் அறிவிப்பு

வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டு பணப் பரிசு கிடைக்கப் பெறாதவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
077 3710291







கனிய எண்ணெய்யின் பயன்படுத்தலுடன்கூடிய தயாரிப்புகள்

## வாரந்தோறும் ரூபா 40,000 வெல்லுங்கள்!

'தூர நோக்குவோம்-ஒன்றிணைவோம்-மின்சாரத்தை சேமிப்போம்' எனும் தொனிப்பொருளில் 'விஜய்'யில் இப்பகுதியில் வெளியாகும் கட்டுரைத்தொடரில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளை அனுப்பி, வாரந்தோறும் தலா ரூபா 1000.00 வீதம் 40 பணப்பரிசுகளை வெற்றிகொள்ள 40 பேர்களுக்கு வாய்ப்புண்டு.

### இவ்வார வினாக்கள்

1. இலங்கையில் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் எங்கு அமைந்துள்ளது?
2. கனிய எண்ணெய் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

மின்சாரத்தை சேமிப்போம்-12,
'விஜய்'
த.பெ இல: 2037,
கொழும்பு.

உங்கள் பெயர், முகவரியை ஆங்கிலத்தில் எழுதவும்

கேள்வி இல-10 இன் பரிசுபெறுவோர் விபரம் 20 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

★ உன் உயர்வை உன்னைக் காட்டிலும் உயர்ந்தவனை வைத்து உவமைப்படுத்திப்பார்.
★ நீ புகழை வெறுத்தால் புகழ் உன்னைத் தேடி வரும்.
★ உன்னுடைய விருப்பங்கள் மகிழ்ச்சியைத் தருவதில்லை. பிறர் உன்னை விரும்புவதே மகிழ்ச்சியைத் தரும்.
★ அடிக்கடி கோபம் கொள்ளாதே - அது உன் அழிவுக்கு வழிவகுக்கும்.
★ நம்பிக்கையை கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல்படி.
★ உன்னைவிட அதிர்ஷ்டம் குறைந்தவனிடம் உன் இன்பத்தைப் பற்றிப் பேசவேண்டாம்.
★ நீ புனிதனாகவோ போதகனாகவோ இருக்கவேண்டாம். மனிதனாக இருந்தால் போதும்.

லோ.வினோபா, கனகராயன்குளம்.

# விடுகதைகள்

1. சுமைகள் சுமப்பவன் மிதிக்க, மிதிக்க ஓடுவான். அவன் யார்?
2. கறுப்பாய் சுருண்டிருக்கும் கயிறும் அல்ல. பழுத்தால் உதிர்ந்து விடும். இலையுமல்ல. அது என்ன?
3. ஊர் வம்பு பேசுவான். ஊரெங்கும் சுற்றி வருவான். அவன் யார்?
4. உச்சாணிக் கொப்பிலே மஞ்சணம் பெட்டியிலே மை போட்டு அடைச்சிருக்கு. அது என்ன?
5. சாத்திய கதவிருக்க, ஏத்திய விளக்கிருக்க சத்தமில்லாமல் வந்த விருந்தாளி. அவர் யார்?
6. தாய் இனிப்பாள்,மகள் புளிப்பாள்,பேத்தி மணப்பாள். அவை என்ன?
7. ஊதினால் பெருப்பான். சிலவேளை வெடிப்பான். அவன் யார்?
8. தள்ளாடித் தள்ளாடிப் போனாலும் தவறாமல்கரை சேர்ப்பான். அவன் யார்?
9. ஒற்றைக் காலில் ஆடுவான் ஓய்ந்து போனால் படுத்து விடுவான். அவன் யார்?

**விடை**

| | |
|---|---|
| 1. சைக்கிள் | 6. பால், தயிர்,நெய் |
| 2. தலைமுடி | 7. பலூன் |
| 3. நாளிதழ் | 8. படகு |
| 4. புளியம்பழம் | 9. பம்பரம் |
| 5. நுளம்பு | |

தொகுப்பு: ஏ.சி.பாத்திமா சமீரா, சென்.மேரிஸ் ம.கல்.,

# ஓவியனின் கர்வம்



முன்னொரு காலத்தில் ஓவியன் ஒருவன் இருந்தான். அவன் வரையும் ஓவியங்கள் தத்ரூபமாகவும் பலர் பாராட்டும்படியும் இருக்கும். அந்நாட்டு மன்னர் பல முறை அவனைப் பாராட்டி பரிசுகளை வழங்கியுள்ளார். அதனால், அவனுக்கு கர்வம் தலைக்கேறியது. ஒருமுறை அவன் இரண்டு காளைமாடுகள் சண்டையிடுவது போன்ற ஓர் ஓவியத்தை வரைந்தான். அந்தக் காளைமாடுகளின் உடல் தோற்றமும் சித்திரத்தின் அமைப்பும் கவர்ச்சியாக இருந்தன. அதனால், அதைத் தன் வீட்டின் வாயிற் படியில் தொங்கவிட்டு வைத்தான். வீதியில் போவோர் வருவோர் அந்த ஓவியத்தைப் பார்த்துப் பாராட்டினர். நீண்ட தூரத்திலிருந்து கூட பலர் வந்து அதனைப் பார்த்து விட்டுச் சென்றனர். மன்னர் கூட அதனைப் பார்த்துப் பாராட்டி பரிசுகளை வழங்கினார். இதனால், அவனுக்கு கர்வம் மேலும் அதிகமாகியது. அந்நாட்டிலேயே தன்னைவிட தத்ரூபமாக வரையக்கூடிய ஓவியன் எவனும் இல்லை என்று இறுமாப்புக் கொண்டான்.

ஒருநாள் மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான். அவன் அந்த ஓவியத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

அதை பார்த்த ஓவியன் கோபத்துடன், "ஏன் சிரிக்கின்றாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவன், "இது என்ன ஓவியம்? காளைகள் சண்டையிடும்போது தம் வால்களை காலுக்கிடையில் இடுக்கிக் கொள்ளும். ஆனால்,இந்த ஓவியத்திலோ காளைகளின் வால்கள் வெளிப்புறத்தில் நீண்டிருக்கின்றன. இதை வரைந்தவர் காளைகள் சண்டை போட்டதைப் பார்த்ததில்லைப் போலிருக்கிறது. கைக்கு வந்ததை வரைந்து விட்டார். தத்ரூபமாக இல்லையே!" என்றான். ஓவியன் அவமானத்தால் தலைகுனிந்தான். அவனுடைய கர்வம் அன்றுடன் நீங்கியது.

ஏ.சஸினா பர்வின்,
தி/அல்-அஸ்ஹர் மு.ம.வித்.,
திருகோணமலை.

# கையெழுத்தின் கதி

ஹொரேஸ் கிரீலியின் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கும். அவர் எழுதிய கையெழுத்தை அவரால் கூடச் சில வேளைகளில் படிக்க முடிவதில்லை.

ஒருநாள் கிரீலி அதே ஊரிலிருந்த மற்றோர் ஆசிரியருக்கு ஒரு குறிப்பு எழுதி அனுப்பி வைத்தார். வேலையாள் அதனை எடுத்துக்கொண்டு போனான். அந்த ஆசிரியர் கடிதத்தை வாங்கிப் படிக்க முயன்றார் அவரால் முடியவில்லை. கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்த்தார்; கண்ணாடியைக் கழற்றி வைத்துப் பார்த்தார்;பக்கத்தில் வைத்துப் பார்த்தார்; தொலைவில் பிடித்துப் பார்த்தார்.



ஊஹூம்! ஒரு சொல் கூடச் சரியாகத் தெரியவில்லை. இதனால், கடிதத்தை ஹொரேஸ் கிரீலிக்கே திருப்பி அனுப்பினார்.

வேலையாள் அக்கடிதத்தை கொண்டு வந்து கொடுத்ததும் நாம் அனுப்பிய குறிப்பிற்குப் பதில்தான் அது என்று தவறுதலாக எண்ணிக்கொண்டார் கிரீலி. அப்படியும் இப்படியும் பிடித்து அவரும் படிக்க முயன்றார். ஓர் எழுத்துக் கூடப் பிடிபடவில்லை. வேலையாளைச் சினத்துடன் பார்த்து, "என்னப்பா இது? ஒன்றுமே புரியவில்லை. என்னதான் அந்த மனிதர் சொல்ல நினைக்கிறார்?" என்றார்.

"இதையேதான் அவரும் கேட்கிறார்" என்றான் வேலையாள் அமைதியாக.

தொகுப்பு: மர்ஸியா நாபிர்,
பேருவளை.

# நலம் வாழ்க ஆசானே!



அறிவுக்கடலின் ஆழத்தை
அன்புடன் நாம் அரவணைக்க
ஆசையுடன் அறிவு தந்த
ஆசான் பெருமகனே!

பாலர் கல்வி முதல்
பல்கலைக்கழகம் வரை
பண்புகள் பல சொல்லித் தந்து
பக்குவமாகப் பழக்கினீரே!

நம்பிக்கைதனை மனதில் நன்றாகவே
ஊட்டி நயமுடன் பழக வைத்தாய்.
நாளும் உயர வழி வகுத்தாய்.
நன்றிதனை எப்படிக் கூறுவோம் புரியவில்லை!

நல்வாழ்வு தந்த எம் ஆசானே
நலமாக நீ என்றும் வாழ்வதற்கு
நல்லாசிகள் பல உமக்கு கிடைத்திடவே
நாம் என்றும் வணங்கிடுவோம் இறைவனையே!

பாத்திமா றிஸ்வானா ரவுப்
தரம் - 11, கொடேகொட மு.வித்.,
ஹெம்மாதகம.

# நாட்டார் பாடல்களின் இனிமை

புராதன காலத்தில் பரம்பரை பரம்பரையாகவே நாட்டார் பாடல்கள் பாடப்பட்டு வந்தன. இது இயல்பாகவே அவர்களிடம் பழக்கப்பட்ட ஒரு செயலாகும். பொதுவாக, இன்றைய சமூகத்தவர்கள் நவீன இசையுலகத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதால் நாட்டார் பாடல்களை அதிகம் விரும்புவதில்லை. இவ்வாறானவர்களை இசையை ரசிக்கத் தெரியாதவர்கள் என்று கூடக் கூறலாம். நாவநாகரிகத்தில் மூழ்கிக் கிடக்கும் இன்றைய இளநெஞ்சங்களுக்கு மேற்கத்திய துள்ளல் இசையுடன்கூடிய பாடல்கள் தேனாக இனிக்கின்றன. ஆனால், நாட்டார் பாடல்கள் இவர்களுக்கு வேம்பாய் கசக்கின்றன. இந்த நிலை மாறவேண்டும்.

இதயத்திலிருந்து வரும் இப்பாடல்களிலுள்ள பொருளின் ஆழத்தை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. மரபுவழியை நேசிக்கத் தெரிந்த மனிதன் நாட்டார் பாடல்களை நேசிப்பான். தன் முதாதையரின் நடத்தைகளை






மதிப்பவன் நிச்சயமாக நாட்டார் பாடல்களை விரும்புவான்.

புராதன காலம் தொடக்கம் நாட்டார் பாடல்கள் எழுத்து வடிவில் பாதுகாக்கப்படவில்லை. இவை பரம்பரை பரம்பரையாகவே வாய் மொழி மூலம் ஏனையவர்களுக்கு கடத்தப்பட்டன. இதனால், எத்தனையோ நாட்டார் பாடல்கள் வழக்கத்திலிருந்து மறைந்திருக்கின்றன. இந்நிலை தொடருமானால் எதிர்காலத்தில் நாட்டார் பாடல்கள் அனைத்தையும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். அதனால், தற்போது இந்நாட்டார் பாடல்களை மொழியியலாளர்கள் எழுத்து வடிவில் பாதுகாக்க முன் வந்திருக்கின்றனர். இது நம் அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும்.

ஜெ.சுமையா, தரம் - 10C,
கே/மா/பதுரியா மத்.கல்.,
மாவனல்லை.

# மாணவ மணிகளே!

'மாணவர் ஆக்கங்கள்' பகுதிக்கு கதை, கட்டுரை, கவிதை போன்ற ஆக்கங்கள் அனுப்புவோர் அவற்றுக்கு ஏற்றபடி படங்களும் வரைந்து வர்ணம் தீட்டி அனுப்பினால் தரம் கண்டு வெளியிடப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி;

மாணவர் ஆக்கம்
'விஜய்'
த.பெ இல 2037.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அங். இல: 3103
கே.நுபைஸ்,
தரம் - 10,
தி.மு.ம.வித்.,
புத்தளம்.


அங். இல: 3104
எம்.சகீல்,
பாலர் பாட..,
உடத்தலவின்னை.


அங். இல: 3105
எம்.கிருள்,
தரம் - 1,
கெட்டபுலா த.ம.வித்.,
கெட்டபுலா.


அங். இல: 3106
எம்.எல்.இம்றா,
தரம் - 9$^{C}$,
அல்-அஸ்றப் ம.ம.வித்.,
சம்மாந்துறை.

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 3107
எம்.சிராஜ்,
தரம் - 11,
உஸைனியா அ.கல்.,
கொழும்பு-14.


அங். இல: 3108
எம்.நவ்சாத்,
தரம் - 8$^{A}$,
கராகொட மு.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.



அங். இல: 3109
சி.திவாகரன், தரம் - 11,
பண்ணாகம்
மெய்கண்டான் ம.வித்,
யாழ்ப்பாணம்.


அங். இல: 3110
எம்.பஸால்,
தரம் - 11,
ஸஹ்றியா அ.கல்.,
ஹெம்மாதகம.

## தரம் 4 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்-5 இன் விடைகள்

(ஒக்டோபர் 7, 14 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

01. (1) மழைக்காட்சி (2) வானம்
(3) ஓ, ஓ என்ற சத்தத்துடன் (4) மரங்கள் அசைந்து ஆடின
(5) வீடு+கூரை (6) கூரைத்தகடுகள் காற்றில் பறக்கின்றன.
02. (1) பரிசோதனை (2) சீருடைத் துணிகள்
03. (1) பெரியவரே! உங்களுக்கு என்ன வேண்டும்?
(2) கடற்கரையில் சிறிய கற்கள், ஊரிகள், சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்.
04. (1) மயில் (2) ஆடியது (3) நீல (4) அழகிய
05. தொலைக்காட்சியில் நமக்குப் பயனுள்ள நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்கவேண்டும்.
06. (1) இளமையில் கற்பதன் சிறப்பு (2) உள்ளத்தைப் பிரதிபலித்தல்
07. (1) Black board (1) Class room (3) Post office
08. (1) புத்தாண்டு வாழ்த்துக்கள். (2) தயவுசெய்து அமைதியாக இரு.
(3) நான் புத்தகம் வாசிக்கின்றேன்.
09. (1) எனக்கு தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்.
(2) புகையிரத நிலையத்திற்குப் போவது எப்படி?
10. வேம்பு 11. தேனீ 12. கறையான் 13. வாகை
14. பால்அறுகு 15. இலுப்பை 16. மரமுந்திரிகை 17. கடதாசிப் பூ
18. பப்பாசி 19. பலா 20. பவளமல்லிகை
21. செவ்வரத்தைப் பூ
22. எலி 23. காட்டுச் சேவல் 24. கழுத்துப்பகுதியை
25. வால் 26. மண்புழு 27. குயில் 28. நத்தை
29. சிலந்தி 30. ஆடு 31. வெள்ளை
32. குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் 33. பிரதேச சபை 34. SLS
35. பழப்புளி
36. நோயாளிக்கு நன்கு சுவாசிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்
37. (1) 8720 (2) 278
38. (1) நூறுகள் (3) 9000
39. 3348 40. 8556 41. 6/8 அல்லது 3/4 42.



43. 5cm 44. 824 புத்தகங்கள்
45. 204 தோடம்பழங்கள்
46. (1) 8 (2) 12
47. 9 கட்டங்கள் 48. ரூபாய் 4.50 49. ரூபாய் 40.00 50. ரூபாய் 35.00

★ பொருத்தமான ஆறு வாக்கியங்கள்.

★ எழுவாய், பயனிலை திருத்தமாக இருக்கவேண்டும்.

## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான
வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான
வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான
வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500
பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 28.10.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 15
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1அ | ய | டி | ன் | | 2எ |
| ம் | | | | 3கா | ய் |
| 4மி | ள | கா | ய் | | ட் |
| | | | | | ஸ் |
| 5ப | ந் | 6தி | | 7தா | |
| டை | | 8நி | த் | தி | ரை |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 13 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

முதலாம் பரிசு
எம்.எச்.எம்.நுஷான்,
173/8, கரீடாவத்தை,
மல்வானை,
கம்பஹா.

இரண்டாம் பரிசு
ச.கம்சிகா,
176/9,
ஜெம்பட்டா தெரு,
கொழும்பு-13.

மூன்றாம் பரிசு
கி.உஜிதா லூயிஸ்,
பள்ளங்கோட்டை,
நானாட்டான்.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வீ | | | யீ | | |
| | | | | 2 | 3 |
| 4 | | 5 | ம் | | |
| தை | | | | 6 | |
| | 7 | | 8 | | ட் |
| 9 | | | ன் | | |

பெயர் : ..............................
வீட்டு முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல : ..............................
பாடசாலை : ..............................
அருகிலுள்ள நகரம் : ..............................
மாவட்டம் : ..............................

### மேலிருந்து கீழ்

1. புதிர் கேள்வியை இப்படிக் கூறுவர்.
3. பழங்காலம் முதல் உடல்கள் பாதுகாக்கப்பட்டு வரும் கல்லறைகள்.
5. இம்சையைக் குறிக்கும்.
7. பூமி என்றும் சொல்வார்கள்.
8. நீரில் வாழ்வது.

### இடமிருந்து வலம்

1. உணவளிக்கும் தொழில் செய்பவர்.
2. நோய். (திரும்பி உள்ளது)
4. திமிர் என்றும் சொல்லலாம்.
6. நெல்லில் இருந்தும் அகற்றப்படுவது.
9. படம் வரைபவன்.

## ஆறுதல் பரிசுகள்

எம்.என்.எப்.பஹ்மிதா,
22A, செட்கோல் விலேஜ்,
பியதிகம, தடல்ல, காலி.

பு.ராகுல்,
679, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

எம்.ஏ.எஸ்.அகீல்,
29, கெனல் வீதி,
வட்டக்கனி, சிலாபம்.

அ.அனுஷியா,
26 ஆம் யூனிட்,
அருணாசல நலன்புரி
நிலையம்,
செட்டிக்குளம், வவுனியா.

ரிஸ்லத் ரிஸ்பான்,
39/6, ஜாபிர் எவன்யூ,
சீனன்கோட்டை,பேருவளை.

எல்.சஞ்சீவ்காந்த்,
550/7 II ஆம் வட்டாரம்,
களுதாவளை,
மாத்தளை.

ஏ.எச்.அப்துல் ஹாதி,
காயர் வீதி, ஏறாவூர்.

வி.சுபலக்ஸ்மி,
36, பிரதான வீதி,
நமுனுகுல.

எம்.எம்.எப்.ஹஸ்னா,
லிட்டில் வெளி,
தெல்தொட்ட.

எம்.இந்திராணி,
ரொத்ஸ்சைல்ட்,
Y.R.C டிவிஷன்,
புசல்லாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை, உவர்மலையைச் சேர்ந்த தேவராஜ்-சகாயமேரி தம்பதியரின் செல்வப் புதல்வி ஹெக்ஷிபா, 17.10.2009 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவரும் இறைமகன் யேசுவின் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் : குடும்பத்தினர்)*

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



திருகோணமலை, நித்தியபுரியைச் சேர்ந்த விஜயநிதி-மேரி வினோஜினி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹாருண், 19.10.2009 அன்று தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.ஏ.எஃப்.அகீலா, தரம் - 7B, க/அஸ்ஹர் மத்.கல்., அகுறனை.



ஜோசப்தேவநேசன், தரம் - 9B, புனித பத்திரிசியார் கல்., தலவாக்கலை.



எம்.ஏ.எஃப்.நுஸ்ஹா, தரம் - 4, க/எனசல்கொல்ல ம.கல்., தெல்தோட்டை.



ஏ.எச்.எஃப்.சாயிலா, தரம் - 3C, கே/பதுரியா ம.கல்., மாவனல்லை.

## ஆடுகளும் இடையனும்



எஸ்.லுசாந்தன், தரம் - 9B, நு/அக்கரப்பத்தனை த.ம.வித்., அக்கரப்பத்தனை.



எம்.எஃப்.பஸ்மிலா, தரம் - 11, மடிகே மு.ம.வித்., குருநாகல்.

## நான்



பாத்திமா சமீனா, தரம் - 3B, சென்.மேரிஸ் ம.கல்., பொகவந்தலாவ.



எம்.இஸட்.எஃப்.சியாமா, தரம் - 4, மடிகே அனுக்கன மு.ம.வித்., ஹெட்டிப்பொல.

## விசிறி



த.துசாந்தன், தரம் - 6T, புனித லூசியாஸ் நவோதயா வித்., கொட்டாஞ்சேனை.



ஃபாத்திமா சில்மியா, தரம் - 8H (சிங்களப் பிரிவு), பாத்திமா பாலிகா ம.வித்., புத்தளம்.

## முயல்



மொஹமட் அமான், தரம் - 8A, கனேதன்னை மதீனா மு.ம.வித்., மாவனல்லை.



ஃபாத்திமா ஸபானா, தரம் - 7A, குருகுத்தல முஸ்லிம் ம.வித்., [illegible]

## காலைக்காட்சி



எம்.எச்.எஃப்.மின்ஹா, தரம் - 9A, மட்/மீரா பாலிகா ம.வித்., காத்தான்குடி.




ஏ.எல்.எம்.றம்ஸான், தரம் - 10, கொடேகொட மு.வித்., ஹெம்மாதகம.

## பலூன்கள்



ம.நிசாங்கலா, தரம் - 5, ஆனந்தகுமாரசாமி முகாம் பாடசாலை.



ஷெய்மா நாஸர், தரம் - 2B, அலிகார் ம.வித்., கள்-எலிய.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

முடிவுத்திகதி 18.11.2009

### ஜனவரி மாதத்துக்கான தலைப்புகள்

- ★ தரம் 1-5 - எனது வீடு அல்லது ஐஸ் பழம்
- ★ தரம் 6-8 - எனது ஆசிரியர் அல்லது மாட்டு வண்டி
- ★ தரம் 9-11 - மரங்கள் நடுவோம் அல்லது மீன் வியாபாரி

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி சுல்தான்கள்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுமதியாயின. அரேபியா, பூட்டான், பாரசீகம், திபெத், கிழக்கு ஆபிரிக்கா மற்றும் சீனா வுடன் வியாபாரத் தொடர்புகள் இருந்தன. அலாவுத்தீன் கில்ஜியின் விலை நிர்ணய முறையினால் அத்தியாவசியப்


தைமூரின் படையெடுப்பைச் சித்தரிக்கும் ஓவியம்

பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டில் இருந்தன.

**கலை,கட்டடக்கலை:** இந்துக் களும் முஸ்லிம்களும் ஒற்று மையுடன் வாழ்ந்துள்ளனர். இந்திய மற்றும் இஸ்லாமிய கலாசாரங்கள் ஒன்றிணைந்து காணப்பட்டன. பாரசீக மொழி அரச மொழியாகக் காணப்பட் டுள்ளது. பாரசீகம், ஹிந்தி, அரபு ஆகிய மொழிகள்


சுல்தானியர் கால கட்டடக்கலை

இணைந்து 'உருது மொழி' உருவானது. இந்திய-அரேபிய சங்கீத கலைகள் ஒன்றுபட்டு, 'இந்துஸ்தானி' சங்கீதம் உருவாகியது. சிதார், சாரங்கி, தபேலா போன்ற இசைக் கருவிகள் பழக்கத்தில் வந்தன.

கட்டடக்கலையிலும் பல பரிமாணங்கள் தோன்றின. வில் வளைவு (Arch), கோள வடிவ கூரை அமைப்பு (Domb), உயரமான கூம்புக் கோபுரங்கள் (Minars) முதலி யன கட்டடங்களுக்கு மேலும் அழகூட்டின. கட்டடங்களின் அமைப்பு பாரசீக பாணியிலும் அலங்கார நுணுக்க வேலைப்பாடுகள் இந்திய தன்மை கொண்டதாகவும் அமைந்ததோடு, இதனால் கட்டடக் கலையில் ஒரு கலப்பு முறை தோன்றி யது. இது 'இந்திய சாரசானிக் முறை' அல்லது 'இந்திய முஸ்லிம் கூட்டுக் கலைப்பாணி' என்று வழங்கப் பட்டது.

குதுப்மினார்,அலய்தர்வாஜா, ஜஹான் பஞ்ச், முத்து மசூதி ஆகிய வையும் தௌலாதபாத், பெரோஸாபாத், கோல்கொண்டா ஆகிய இடங்களில் காணப்படும் கோட்டைகளும் இந்த 'சாரசானிக்' கட்டட அமைப்பைக் கொண்டவை. இவற்றிலுள்ள கோள வடிவ கூரை அமைப்பில் காணக்கூடிய நுணுக்கமான வண்ணச் சித்திர வேலைப்பாடுகள் சிறப்பு அம்சம் கொண்டனவாக விளங்குகின்றன.

## டில்லி சுல்தான்களின் விழ்ச்சிக்கான காரணங்கள்

**உள்நாட்டுக் கலகங்கள்:** முகமது பின் துக்ளக், தன்னை எதிர்த்துக் கலகம் செய்தவர்களை அடக்கத் தவறினார். அவருடைய சீர்திருத்தங்களே நாட்டினுடைய அழிவுக்கு வழிவகுத்தன. பெரோஸ்ஷாவின் பெருந் தன்மையான நடவடிக்கைகள் பிரபுக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தின. எனவே, அவரின் பின் வந்த அரசர்களால் தமக்குக் கீழ் பணிபுரிந்தவர்களை அடக்க முடியவில்லை.

**சுகபோக வாழ்க்கை:** சுல்தானிய அரசு தொடங்கியபோது துருக்கிய அரசர்களும் அவர்களது சேவகர் களும் கடுமையாக உழைப்பவர்களா கவும் செயல் வீரர்களாகவும் இருந் தனர். காலப்போக்கில் சுகபோக வாழ்க்கைக்கு அடிமையாகி, தம் திறமைகளையும் இழந்தனர். எனவே, இப்றாஹிம் லோதியின் காலத்தில் நிலவிய பிரபுக்களின் போக்கு அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

**தைமூரின் படையெடுப்பு:** இது சுல்தானிய அரசுக்கு மரண அடியாக விளங்கியது.

-எஸ்.எம்.எம். ஹரீஸ்






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிற்கு சமாதானத்திற்கான 'நொபேல்' விருது

இம்முறை சமாதானத்திற்கான 'நொபேல்' விருது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு வழங்கப்பட்டுள்ளதையிட்டு, அவருக்கு உலக நாடுகள் பலவற்றிட மிருந்து வாழ்த்துக்களும் பாராட்டுக் களும் குவிந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி, விருதிற்கு ஒபாமாவை தேர்வு செய்த 'நொபேல்' சமாதான விருதுக் குழுவின் தலைவரான டொபியோன் ஜெக்லன்ட் கூறுகின்ற கருத்தின்படி, அணுப்பரம்பல் அற்ற, அழிவு தரும் ஆயுதங்கள் அற்ற அமைதியான ஓர் உலகினை உருவாக் குவதில் உன்னதமான சிந்தனைகளை ஒபாமா கொண்டுள்ளமையால் அதனைக் கௌரவித்து மேலும் அவரை ஊக்கப்படுத்துவதற்காகவே 'நொபேல்' சமாதான விருதிற்கு அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் சில விமர்சகர்களின்





கருத்தின்படி, கடந்த காலங்களில் அமெரிக் காவின் ஜனாதிபதியாக இருந்தவர் களில் அநேகர் உலக அளவில் புதுப்புது பிரச்சினைகளை ஏற்படுத்து பவர்களாகவே இருந்துள்ளனர். வேற்று நாடுகளை மோதவிட்டு அதில் தனது நலனைப் பேணும் இராஜதந்திரம்தான் முன்னைய தலைவர்களால் கையாளப்பட் டது.இதன் விளைவாக உலக நாடுகள் பலவற்றிற்கிடையே மோதல்கள், கருத்து வேற்றுமை ஆகியன ஏற்பட்டன. உலக சமாதானம் பாதிக்கப்பட்டது.அந்த வகையில், பார்க்கையில் ஒபாமா பதவி யேற்றதன் பின்னர் அவ் வாறான புதுப்புது பிரச்சினைகளை ஏற்படுத்தி, சிக்கல்களை ஏற் படுத்துவதில் அவர் ஆர்வம் காட்ட வில்லை. ஒருவகையில் அது உலக நாடுகளுக்கிடையே ஒருவித அமைதியை தோற்றுவித்துவிட்ட தாக அமைந்துள்ளதாகவும் கருது கின்றனர். அந்தவகையிலும் ஒபாமா இந்த விருதிற்கு பொருத்தமானவரே என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# டொனி பிளேயருக்கு இத்தாலி ஆதரவு





ஐரோப்பிய ஒன்றிய அமைப்பின் தலைவர் பதவிக்கு பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டொனி பிளேயரை நியமிப்பதில் விருப்பம் கொண்டிருப்பதாக இத்தாலி அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய அமைப்பின் தலைமைப் பதவிக்கு போட்டியிட டொனி பிளேயர் ஆர்வம் கொண்டிருப்பதாக செய்திகள் பரவியுள்ள நிலையிலேயே இத்தாலி இதுகுறித்து தனது விருப்பத்தை தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாதம் இறுதியில் நடைபெறவுள்ள ஐரோப்பிய அமைப்பு மாநாட்டில் மேற்படி பதவிக்குப் பொருத்தமான ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இந்த தெரிவிற்கு போட்டியிடவே டொனி பிளேயர் முயற்சித்து வருகின்றார். மேலும், நெதர்லாந்தின் பிரதமர் ஜேன்பீட்டர், பின்லாந்தின் பிரதமர் பாவோ லியொனத் ஆகியோரும் இந்த பதவிக்கு போட்டியிடவுள்ளனர்.

## அற்லஸ் கேள்வி - 226

**கேள்வி:** அடுத்த ஐரோப்பிய ஒன்றிய மாநாடு எந்த மாதம் நடைபெறவுள்ளது?

**சரியான விடை..........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 226,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 224 இன் சரியான விடை: 163**

**பரிசு பெறுவோர்**

எஃப்.தஹானி,
236, சமகி ஜனபத,
எலபடகம, பன்னல.

பி.அஜித்கர்,
224, முத்தெட்டுவ, மாறஸ்ஸன.

சாஜிதா ஹசன்,
74/7, சகிஸ்ஸர மாவத்தை, கல்கிசை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அக்காவும் தம்பியும் மரக்கறித் தோட்டத்தில் மரக்கறி பறிக்கும் நிகழ்வை அடிப்படையாகக்கொண்ட ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

மල්ලි: අක්කේ අද අපේ එළවළු කොටුවේ එළවළු කඩන්න පුළුවන් වෙයි.
அக்கே அத அபே எலவளு கொடுவே எலவளு கடன்ன புளுவன் வெய்.
தம்பி: அக்கா இன்று எங்கள் மரக்கறித் தோட்டத்திலிருந்து மரக்கறிகளைப் பறிக்கலாம்.

අක්කා: ඔව් මල්ලි දැන් එළවළු හොඳට හැදිලා.
ஒவ் மல்லி தென் எலவளு ஹொந்தட ஹெதிலா.
அக்கா: ஆம் தம்பி இப்போது மரக்கறிகள் நன்றாக முற்றி இருக்கின்றன.

මල්ලි: අපි යමු එළවළු කඩන්න.
அபி யமு எலவளு கடன்ன.
தம்பி: நாங்கள் மரக்கறி பறிக்கப் போவோம்.

අක්කා: මල්ලි මේ මිරිස් ටික කඩන්න. මේ කූඩයට දාන්න.
மல்லி மே மிரிஸ் டிக கடன்ன. மே கூடயட தான்ன.
அக்கா: தம்பி இந்த மிளகாய்களைப் பறியுங்கள். இந்தக் கூடையில் போடுங்கள்.

මල්ලි: අක්කේ වම්බටු හොඳට පැහිලා නේද?
அக்கே வம்படு ஹொந்தட பெஹிலா நேத?
தம்பி: அக்கா கத்தரிக்காய் நன்றாக முற்றியிருக்கிறது தானே?

අක්කා: ඔව් මල්ලි.
ஒவ் மல்லி.
அக்கா: ஆம் தம்பி.



මල්ලි: අක්කා ඒවා කඩන්න.
அக்கா ஏவா கடன்ன.
தம்பி: அக்கா அவற்றைப் பறியுங்கள்.

මම බණ්ඩක්කා කඩන්නම්.
மம பண்டக்கா கடன்னம்.
நான் வெண்டிக்காய் பறிக்கின்றேன்.

අක්කා: මල්ලි එළවළු හුඟක් තියෙනවා නේද?
மல்லி எலவளு ஹுங்கக் தியெனவா நேத?
அக்கா: தம்பி மரக்கறிகள் நிறைய இருக்கின்றன தானே?

මල්ලි: ඔව් අක්කේ අපි නැන්දටත් ටිකක් දෙමු.
ஒவ் அக்கே அபி நெந்தடத் டிகக் தெமு.
தம்பி: ஆம் அக்கா நாங்கள் மாமிக்கும் கொஞ்சம் கொடுப்போம்.

අක්කා: ඔව් ඒක හොඳයි මල්ලි.
ஒவ் ஏக ஹொந்தய் மல்லி.
அக்கா: ஆம் அது நல்லது தம்பி.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: நாங்கள் மரக்கறி பறிக்கப் போவோம்.
අපි යමු එළවළු කඩන්න.

i. மரக்கறிகள் நன்றாக முற்றி இருக்கின்றன.
..........................................................................

ii. இந்தக் கூடையில் போடுங்கள்.
..........................................................................

iii. நான் வெண்டிக்காய் பறிக்கின்றேன்.
..........................................................................






✱ **Did** எனும் இறந்தகால துணை வினைச்சொல்லையும் (**Past Tense Auxiliary Verb**) மற்றும் **Do** எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லையும் (**Present Tense Auxiliary Verb**) தனித் தனியாகக் கையாண்டு அமைக்கப்பட்ட, நீளமான வாக்கியங்களை இங்கே ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Yesterday I did my work quickly. (Past Tense)
நேற்று நான் எனது வேலையை விரைவாகச் செய்தேன். (இறந்தகாலம்)

(ஆ) I always do my work quickly. (Present Tense)
நான் எப்பொழுதும் எனது வேலையை விரைவாகச் செய்கின்றேன். (நிகழ்காலம்)

---

(இ) Yesterday you did your work slowly. (Past Tense)
நேற்று நீ உனது வேலையை மெதுவாகச் செய்தாய். (இறந்தகாலம்)

(ஈ) You always do your work slowly. (Present Tense)
நீ எப்பொழுதும் உனது வேலையை மெதுவாகச் செய்கின்றாய். (நிகழ்காலம்)

---

(உ) Yesterday we did our work neatly. (Past Tense)
நேற்று நாங்கள் எமது வேலையை நேர்த்தியாகச் செய்தோம். (இறந்தகாலம்)

(ஊ) We always do our work neatly. (Present Tense)
நாங்கள் எப்பொழுதும் எமது வேலையை நேர்த்தியாகச் செய்கின்றோம். (நிகழ்காலம்)

---

(எ) Yesterday they did their work properly.
நேற்று அவர்கள் தமது வேலையை முறையாகச் செய்தார்கள். (இறந்தகாலம்)

(ஏ) They always do their work properly. (Present Tense)
அவர்கள் எப்பொழுதும் தமது வேலையை முறையாகச் செய்கின்றார்கள். (நிகழ்காலம்)

---

✱ **He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்கள் (**Pronouns**) சகிதம் கையாளப்படுகின்றபோது, **'Do'** எனும் நிகழ்கால வினைச்சொல் **'Does'** என மாற்றம் அடைவதை நாம் மறந்துவிடக்கூடாது.

(அ) Yesterday he did his work quickly. (Past Tense)
நேற்று அவன் தனது வேலையை விரைவாகச் செய்தான். (இறந்தகாலம்)

(ஆ) He always does his work quickly. (Present Tense)
அவன் எப்பொழுதும் தனது வேலையை விரைவாகச் செய்கின்றான். (நிகழ்காலம்)

---

(இ) Yesterday she did her work carefully. (Past Tense)
நேற்று அவள் தனது வேலையை கவனமாகச் செய்தாள். (இறந்தகாலம்)

(ஈ) She always does her work carefully. (Past Tense)
அவள் எப்பொழுதும் தனது வேலையை கவனமாகச் செய்கின்றாள். (நிகழ்காலம்)

---

(உ) Yesterday it did its work properly. (Past Tense)
நேற்று அது தனது வேலையை முறையாகச் செய்தது. (இறந்தகாலம்)

(ஊ) It always does its work properly. (Present Tense)
அது எப்பொழுதும் தனது வேலையை முறையாகச் செய்கின்றது. (நிகழ்காலம்)

## Do மற்றும் Does என்பன ஒரே பார்வையில் இங்கே....

(அ) I do.
நான் செய்கின்றேன்.

(ஆ) You do.
நீ செய்கின்றாய்.

(இ) We do.
நாங்கள் செய்கின்றோம்.

(ஈ) They do.
அவர்கள் செய்கின்றார்கள்.

(உ) He does.
அவன் செய்கின்றான்.

(ஊ) She does.
அவள் செய்கின்றாள்.

(எ) It does.
அது செய்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னொரு காலத்தில் முதியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். மூத்த புதல்வர்கள் இருவரும் புத்திசாலிகளாக இருந்தனர். ஆனால், மூன்றாவது மகன் எமில்யா முட்டாளாக இருந்தான். இரு மூத்த சகோதரர்களும் எப்போதும் உழைத்தபடியே இருந்தனர். ஆனால், எமில்யா மட்டும் சூட்டடுப்புப் பரண் மீது நாள் முழுவதும் படுத்திருப்பான்.

ஒருநாள் மூத்த சகோதரர்கள் இருவரும் சந்தைக்குச் சவாரி போயிருந்தபோது அவர்களுடைய மனைவிகள் கூறினார்கள்;

ஆறு பூராவும் பனிக்கட்டியால் மூடியிருந்தது. தனது கோடாரியால் பனிக்கட்டியில் ஒரு துளை போட்டு, இரண்டு வாளி நிறையத் தண்ணீர் எடுத்து வைத்துவிட்டு, குனிந்து துளைக்குள்ளாக நோக்கினான். அங்கே நீரில் பைக் மீன் ஒன்று நீந்திக் கொண்டிருப்பதைக் கண்டான். தனது கையை அவன் உள்ளே விட்டதும் மீன் அவன் கையில் சிக்கிக் கொண்டது.

''இன்று சாப்பாட்டுக்கு அருமையான பைக் மீன் சூப் வைக்கலாம்!'' என்று மகிழ்வுடன் கூறினான்.

ஆனால், திடீரென்று பைக் மீன் மனிதக் குரலில் பேசியது; ''என்னைப் போகவிடு எமில்யா, என்றைக்காவது உனக்கு நான் உதவுவேன்'' இதைக்கேட்ட எமில்யா சிரித்தான்.

''என்ன செய்யமுடியும்?

**துளைக்குள்ளாக நோக்கியபோது, அங்கே நீரில் பைக் மீன் ஒன்று நீந்திக் கொண்டிருந்தது**




''எமில்யா, போய் கொஞ்சம் நீர் கொண்டு வா''

சூட்டடுப்புப் பரண் மீது படுத்தவாறு எமில்யா பதிலளித்தான்; ''நான் கொண்டுவரமாட்டேன். எனக்கு இதில் விருப்பமில்லை''

''எமில்யா, போ அல்லது உன் அண்ணன்கள் சந்தையிலிருந்து உனக்கு எந்தப் பரிசும் கொண்டுவரமாட்டார்கள்''

''ஓ!அப்படியானால் சரி''

சூட்டடுப்பிலிருந்து கீழே இறங்கிய எமில்யா தனது காலணிகளையும் நீண்ட மேற்சட்டையையும் அணிந்துகொண்டு, இரண்டு வாளிகளுடன் கோடரி ஒன்றையும் எடுத்துக்கொண்டு ஆற்றுக்குச் சென்றான்.

உன்னால் ஒன்றும் செய்யமுடியாது. உன்னை வீட்டுக்கு எடுத்துப் போய் என் அண்ணிகளிடம் சூப் தயாரிக்கச் சொல்லலாம். மீன் சூப் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்''

ஆனால், பைக் மீனோ மீண்டும் அவனிடம் கெஞ்சிக் கூறியது; ''என்னைப் போகவிடு, எமில்யா. நீ விரும்பும் எதையும் நான் செய்வேன்''

''சரி. ஆனால், என்னை முட்டாளாக்க முயலவில்லை என்பதை முதலில் நீ நிரூபித்தாக வேண்டும்'' என்று எமில்யா பதிலளித்தான்.

''உனக்கு என்ன வேண்டும் என்பதைச் சொல் எமில்யா'' என்றது பைக் மீன்.

''ஒரு துளி நீர் கூடச் சிந்தாமல் என்னுடைய வாளிகள் அவையாகவே வீட்டுக்குப் போகவேண்டும் என்று விரும்புகிறேன்''

''நல்லது எமில்யா. உனக்கு ஏதாவது தேவைப்படும்பொழுது, நீ இப்படிச் சொல்; 'பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்!' உடனடியாக எல்லாமே நடந்துவிடும்'' என்றது பைக் மீன்.

எமில்யா கூறினான், ''பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! வாளிகளே, நீங்களாகவே வீட்டுக்குப் போங்கள்''

உடனே வாளிகள் திரும்பி நகர்ந்தன. பைக் மீனை பனிக்கட்டித் துளைக்குள்ளாக நழுவ விட்டுவிட்டு எமில்யா வாளிகளுக்குப் பின்னே நடந்தான். எமில்யா தனக்குத்தானே சிரித்தபடி நடந்து வர, வாளிகள் கிராமத்தின் தெருவில் சென்றதைக் கண்டு கிராமத்தவர்கள் கூடிநின்று அதிசயித்தார்கள். எமில்யாவினுடைய வீட்டுக்குள் நுழைந்த வாளிகள் ஒரு பெஞ்சின் மீது தாவி நின்றன. இவற்றின் பின்னால் வந்த எமில்யா சூட்டடுப்புப் பரண் மீது திரும்பவும் ஏறிப் படுத்துக்கொண்டான்.

(தொடரும்..)

# புத்திசாலி இளைஞன்

சுப்புணி அந்தக் கிராமத்திலேயே புத்திசாலியான இளைஞன். என்னதான் கிராமத்தில் கடுமையாக உழைத்தாலும் போதிய வருமானம் கிடைக்காமல் இருந்தது.

''அம்மா! நான் அதிகமாகப் பணம் சம்பாதிக்கும் பொருட்டு பட்டணம் செல்ல இருக்கிறேன். பட்டணத்தில் சென்று வேலை பார்த்தால்தான் நமது வறுமை எல்லாம் நீங்கி நாம் மகிழ்ச்சியாக வாழமுடியும்'' என்றான்.

''சுப்புணி உன் விருப்பம் சரியானதுதான். ஆனால், பட்டணம் செல்வதற்கு பணம் வேண்டுமே... இரு வருகிறேன்'' என்று கூறி வீட்டின் உள்ளே ஓர் அறைக்குச் சென்று திரும்பி வந்தார் தாய்.

''மகனே! இது நாம் காலம் காலமாக பாதுகாத்து வைத்திருந்த தங்கப் பொற்காசு. எந்தச் சூழலிலும் இதனை எடுக்காமல் வைத்திருந்தேன். இப்போது இதனை எடுப்பதைத்தவிர வேறு வழியில்லை. எனவே, நீ நமது ஊர் எல்லை வரை நடந்து செல். அதன் பின்னர் இந்தப் பொற்காசைப் பணமாக்கி பட்டணம் போய் சேர்ந்துவிடு. மிகவும் கவனமாக இரு. எக்காரணம் கொண்டும் ஊர் எல்லையைத் தாண்டும்வரை இதனை தவறவிட்டு விடாதே'' என்று கூறிக்கொண்டு மகனுக்கு வழியில் சாப்பிடுவதற்கு சிறிது கட்டுச்சோறு கட்டி வழியனுப்பி வைத்தார் அவனுடைய தாயார்.

கட்டுச்சோறுடன், பொற்காசையும் பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டான் சுப்புணி. ஊர் எல்லையின் அருகில் சென்று கொண்டிருந்தான். அப்போது, வழியில் ஓர் இடத்தில் மரங்களும் செடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அந்த இடத்தில் பொதுவாக மனிதர்கள் நடமாட்டம் எதுவும் இருக்காது. சுப்புணி அந்த இடத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது முரட்டு உருவத்துடன் கூடிய நான்கு திருடர்கள் அவனை வழிமறித்தனர்.

''ஏய்! இருக்கிறதை எல்லாம் ஒழுங்காகக் கொடுத்திட்டுப் போ'' என்றனர்.

முதலில் சிறிது அச்சமடைந்த சுப்புணி, பின்னர் சுதாகரித்துக்கொண்டு, ''ஐயா! அவசரப்படாதீர்கள். என்னிடம் அப்படி ஒன்றும் இல்லை. இதோ, இந்த பொதியில் மிகவும் சுவையான உணவு மட்டும் இருக்கிறது. நீங்கள் எல்லோரும் மிகவும் களைப்பாக இருப்பதுபோல் தெரிகிறது. எனக்கும் நீண்ட தூரம் நடந்து வந்ததால் நல்ல பசியாக வேறு இருக்கிறது. முதலில் நாம் எல்லோரும் சாப்பிடுவோம்'' என்று உணவுப் பொதியை கீழே வைத்துப் பிரித்தான்.

உணவுப் பதார்த்தத்தின் வாசனை திருடர்களுக்கு சாப்பிடும் ஆவலைத் தூண்டியது. ''நீங்கள் சாப்பிடுங்கள். நான் எப்போதும் குளித்துவிட்டு சாப்பிடுவதுதான் வழக்கம். எனவே, அருகிலுள்ள குளத்தில் குளித்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

குளத்தில் மூழ்கி எழுந்த சுப்புணி, திடீரென்று கையில் தாயார் கொடுத்த பொற் காசுடன் திருடர்கள் இருக்கும் இடத்தை நோக்கி வேகமாக ஓடிவந்தான். அவன் திருடர்களை நோக்கி, ''ஐயாமார்களே! இதோ இந்தக் குளத்தில் ஓர் அதிசயம் நிகழ்கிறது. இந்தக் குளத்தில் ஒரு தடவை மூழ்கி எழுந்தால் ஒரு பொற்காசு கிடைக்கிறது. இது உங்களுக்கு இதுவரை தெரியாதா? இதோ பாருங்கள்'' என்று தன் கையிலுள்ள பொற்காசைக் காட்டினான்.



பொற்காசைப் பார்த்த திருடர்கள், ''ஆஹா... ஒரு தடவை மூழ்கி எழுந்தால் ஒரு பொற்காசு கிடைக்கிறதா? நாம் பல தடவைகள் மூழ்கி எழுந்தோமானால் அதிகமான பொற்காசுகள் கிடைக்குமே'' என்று உணவுப் பொதியை அப்படியே வைத்துவிட்டு நான்கு திருடர்களும் குளத்தை நோக்கி விரைவாக ஓடினர். இதுதான் சரியான நேரம் என்று உணர்ந்த சுப்புணி உணவுப் பொதியை வாரிக் கட்டிக்கொண்டு அந்த இடத்தை விட்டு விரைவாக ஓடிச் சென்றுவிட்டான். குளத்தில் குதித்த திருடர்கள் மேலும், மூழ்கி, மூழ்கி எழுந்தவாறு இருந்தனர். அவர்கள் கைகளில் எந்தப் பொற்காசும் கிடைக்கவில்லை. சுப்புணி, ஏற்கனவே தனது கையில் பொற்காசு வைத்திருந்தது இந்த முட்டாள் திருடர்களுக்கு எங்கே தெரியப் போகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2011 உலகக் கிண்ணம் இலங்கை 'ஏ' பிரிவில்

## இந்தியா, பாகிஸ்தான் 'பீ' பிரிவில்

2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் A, B என இரண்டு பிரிவுகளின் கீழே நடைபெறவுள்ளன. இதில் இலங்கை அணி 'A' பிரிவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி 'A' குழுவில் இலங்கையுடன் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, சிம்பாப்வே, கெனடா, கென்யா ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

'B' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. தென் ஆபிரிக்காவின் ஜொகனஸ்பேர்க் நகரில் நடைபெற்ற ஐ.சி.சி மாநாட்டிலேயே குறித்த பிரிவுகளுக்குரிய அணிகள் தேர்வு செய்யப்பட்டன.

49 போட்டிகளைக் கொண்ட 2011 உலகக் கிண்ணப் போட்டிகளில் காலிறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா நான்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டு காலிறுதிப் போட்டிகள் நடைபெறும். பின்னர் அவற்றில் வெற்றியீட்டி கூடிய புள்ளிகளைப் பெற்று முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகளுக்கிடையே அரையிறுதிப் போட்டிகள் நடைபெறும்.

இதில் ஒரு காலிறுதிப் போட்டியும் ஓர் அரையிறுதிப் போட்டியும் அடங்கலாக 12 போட்டிகள் இலங்கையில் நடைபெறவுள்ளன. போட்டியின் ஆரம்ப வைபவம் பங்களாதேஷில் 2011 பெப்ரவரி மாதம் நடைபெறுவதுடன், முதலாவது போட்டி பெப்ரவரி 19 ஆம் திகதி பங்களாதேஷிலேயே நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஓரம் ஓய்வு

நியூஸிலாந்தின் சகல துறை ஆட்டக்காரரான ஜெக்கப் ஓரம் டெஸ்ட் களத்திலிருந்து ஓய்வு பெற தீர்மானத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் அவர் தொடர்ந்தும் சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் 'டுவென்டி டுவென்டி' போட்டிகளிலும் கலந்து கொள்வார் என்று கூறப்படுகின்றது.

ஒரு வருடகாலமாக உடல் உபாதைகளுக்கு ஆளாகி வருகின்ற ஓரம், தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற செம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் மீண்டும் உபாதைக்கு உள்ளானார். 31 வயதாகின்ற ஓரம் 2002 ஆம் ஆண்டிலேயே டெஸ்ட் களத்தில் அறிமுகமானார். அன்று தொடக்கம் இன்றுவரை 33 டெஸ்ட் போட்டிகளில் 1,780 ஓட்டங்களை அவர் பெற்றுள்ளதுடன் 60 விக்கெட்களையும் பெற்றுள்ளார்.

மேலும், 132 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டு 2,050 ஓட்டங்களையும் 132 விக்கெட்களையும் அவர் பெற்றுள்ளார்.

கடந்த மாதம் இலங்கையில் நடைபெற்ற 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் நியூஸிலாந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டவர்களில் ஓரம் முக்கியமானவரர்வார். இவரது சிறந்த பந்து வீச்சின் காரணமாகவே நியூஸிலாந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்ல முடிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மின்சாரத்தை சேமிப்போம்

### போட்டி இல - 10

### தலா ரூ.1,000 பணப்பரிசை வெல்லும் வாசகர்கள் வருமாறு;

டி.தமயந்தி,
கலதுர தபால் நிலையம், மெடகலதுர, இரத்தினபுரி.
கு.ஷங்கீரன், வலயம் 04, 74, வெங்கல செட்டிக்குளம்.
எம்.எல்.எம்.ஃபைஸல்,
இஸ்மாத் மன்ஸில், கே.பீ.ஹாஜி வீதி, ஓட்டமாவடி-01.
எம்.ஏ.எம்.அல்தாஃப்,
197/41, யு.சி விடுதி, மன்னார் வீதி, புத்தளம்.
எஸ்.எஃப்.ஷம்லா,
94/21, பெனடியன வத்த, தெனிபிடிய, வெலிகம.
எம்.எச்.எம்.இம்ரான் ஹிலால்,
528, ஸ்கூல் சைட், பம்ஹான, நாரங்கொட.
எம்.சி.எம்.இஸாக்,
39A ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது-09.
வி.ராஜிதா,
121, 2 ஆம் ஒழுங்கை, நித்தியபுரி, திருகோணமலை.
கே.தனுஞ்சியன்,
218/E, கோரக்கர் ஒழுங்கை, சம்மாந்துறை.
ஹசரங்க, 217, ஸ்ரீவிமலாராம வீதி, வெல்லம்பிட்டிய.
துலஞ்சனி, ஹால்பந்தெனிய, தெனியாய.
பிரியங்கர, கனத்கொடகம, ஹக்மன.
சமத்கா, 252, கடுவெல வீதி, பத்தரமுல்ல.
தீபிகா, கந்தேகெதர, பங்கம, அகுரஸ்ஸ.
கவிந்த்யா, 183/46, சிரிலிய, பொல்கஸ்ஓவிட்ட.
தினுஷா, ஹிங்னாரங்கொல்ல, ரில்பொல, பதுளை.
இஷான், 326, வடுகந்த, பலாங்கொட,
மல்ஷான், தரம் 12B, வித்யார்த்த வித்., கண்டி.
மதாரா, 88/14, பல்லேவத்த, பலாங்கொட.
அனுராதா, 25/1, சியம்பலாபிடிய வீதி, கண்டி.
ம்ஹேஷிகா, தொழிற்சாலைக்கருகில், கம்மல, வயிக்கால.
கமல், கோட்டை, உஹுமிய.
நளின், தெமடகஹவெல, நாரம்மல.
சந்தலிகா, தர்மபால மாவத்தை, ரத்னபுர.
இந்துரங்கா, 491, எல பதலங்கல.
யுக்தி, தெல்கபல்ல, பேருவளை.
ஹேஷிகா, தெம்பிலிகொட்டுவ, வத்தமுல்ல, அடால.
விராஜ், கஹாவதுகொட, முருதலாவ.
விமுக்தி,
D3/200, சரணபால ஹிமி மாவத்தை, பொரளை.
ரஸாங்கனி, 35/34, பண்டாரவளை வீதி, பதுளை.
ஜயவர்தன, கல்பிந்தின எல, பிஹிம்புவ.
சஹனி, 158/10, பிலியந்தல வீதி, மஹரகம.
இரேஷா, 49B, அருக்கொட, பானந்துர.
தினேஷ், 89, செனரத்கம, கடுகஸ்தொட.
லேனுஷி, 326 4B, அருவிவல வீதி, பன்னிபிட்டிய.
ஏ.ஆர்.ஃபாத்திமா ஷேஹா, 05, சிலாபம்.
எச்.எம்.எச்.எஸ்.ஹேரத்,
259/C, பஹல கொஸ்கம, கொஸ்கம.
கே.ஏ.டீ.மல்ஷா மதுஷானி,
208/2, மாடிம, ஹெய்யன்துடுவ.
பி.ஹிருனி நிமாஷா, 2/11, பாதகம, முத்தரகம.
மதுஷானி, இத்தமல்கொட, பெல்மடுல்ல.

## அடுத்த மாதம்

# இலங்கை அணி இந்தியா விஜயம்

அடுத்த மாதம் (நொவெம்பர்) இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுலாவொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இதன்போது 3 டெஸ்ட் போட்டிக்ளிலும் 5 ஒருநாள் போட்டிகளிலும் 2 'டுவென்டி டுவென்டி' போட்டிகளிலும் இலங்கை, இந்திய அணிகள் போட்டியிடவுள்ளன.



டெஸ்ட் போட்டிகள் மும்பாய், கான்பூர், அஹமதாபாத் ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளதுடன்,ஒருநாள் போட்டிகள் கட்டாக், ராஜ்கொட், விசாகப்பட்டினம், கொல்கத்தா, புதுடில்லி ஆகிய நகரங்களில் நடைபெறும்.

மேலும், 'டுவென்டி டுவென்டி' போட்டிகள் மொஹாலி, நாக்பூர் ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## சிறந்த வீரராக ஷிஹிப் தெரிவு

பிரபல கிரிக்கெட் சஞ்சிகையான 'விஸ்டன்' சஞ்சிகை 2009 ஆம் ஆண்டில் சிறந்த டெஸ்ட் வீரராக பங்களாதேஷ் அணியைச் சேர்ந்த ஷிஹிப் அல்ஹஸனை தேர்வு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையில் இவர் காட்டிய திறமைகளின் அடிப்படையிலேயே இவரை சிறந்த வீரராக மேற்படி 'விஸ்டன்' சஞ்சிகை தேர்ந்தெடுத்துள்ளது.

குறித்த காலகட்டத்தில் இவர் எட்டு டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 498 ஓட்டங்களையும் 45 விக்கெட்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தெரிவுப் பட்டியலில் இரண்டாவது இடத்தை இந்தியாவின் காம்பீரும் மூன்றாவது இடத்தை தென்னாபிரிக்காவின் ஸ்மித்தும் நான்காவது இடத்தை இந்தியாவின் டென்டுல்கரும் பெற்றுள்ளனர்.



## பீச் வொலிபோல் போட்டியாளர் தெரிவு

ஆசிய கிண்ண கரையோர 'பீச் வொலிபோள்' போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை அணியை தெரிவு செய்வதற்கான போட்டியாளர் தெரிவுகள் இந்த மாதம் 21 ஆம் திகதி நீர்கொழும்பு கரையோரப் பகுதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய 'வொலிபோள்' சம்மேளனம் வழிநடத்துகின்ற மேற்படி போட்டிகள் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை தென் சீனாவின் ஹைக்கூ என்ற நகரில் நடைபெறவுள்ளன.

இதில் வெற்றியீட்டும் அணிக்கு ரூபா 115 லட்சம் பரிசாக வழங்கப்படுவதுடன், ஆசிய கரையோர 'பீச்'வொலிபோள் போட்டி அணிகளை தரப்படுத்தும் பட்டியல் [illegible] வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கவனயீனத்தால் உடலுக்குத் தீங்காகக்கூடிய உணவுகள்







நாம் உணவாகக்கொள்ளக் கூடிய உணவுப் பதார்த்தங்களை சந்தையிலிருந்து கொள்வனவு செய்யும்போது அவற்றின் தரம், தயாரிப்பு திகதி, காலாவதி யாகும் திகதி என்பன குறித்து விசேடமாக கவனத்தில் கொள்ளவேண்டும். அத்துடன், மரக்கறி, மீன், பழங்கள், கீரை வகை என்பன புதியவையாகவும் பழுதடையாதவையாகவும் இருக்கவேண்டும். அவ்வாறே, இன்னும் சில உணவுப் பதார்த் தங்களை உணவுக்காக சுத்தப் படுத்தல், தயார்படுத்தல், சமைத் தல் போன்ற செயற்பாடுகளின் போதும் பல்வேறு விடயங் களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் அந்த உணவுகள் உடலுக்கு பாரிய தீங்குகளை ஏற்படுத்த லாம். அத்தகைய உணவுப் பதார்த்தங்களை எமது உடலுக் குத் தீங்கை ஏற்படுத்தாத வகை யில் எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்து சற்று தெரிந்துகொள்வோம்.

## கிழங்கு வகைகள்

கிழங்கு வகைகளை சந்தையிலிருந்து வாங்கும்போது அவை பழுதடைந்தவையாக (வெட்டுப்பட்டிருத்தல், உடைந் திருத்தல், விலங்குகள் சாப்பிட்டிருத்தல்) இல்லாமல் புதியவையாக இருக்கின் றனவா என்பதைக் கவனிக்கவேண்டும். ஏனெனில், பழுதடைந்த கிழங்குகளில் பல்வேறு நுண் கிருமிகள் தொற் றியிருக்கலாம் அல்லது அவை நச்சுத்தன்மை அடைந்திருக்க லாம். இவ்வா றான கிழங்கு வகைகள் சந்தையில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. எனவே, அவற்றை வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. கிழங்கு வகைகளில் மாச்சத்து அதிகளவில் அடங்கியிருக் கின்றது. இலகுவில் சமைத்து உணவாகக் கொள்ளக்கூடிய ஓர் உணவு வகையா கவே கிழங்கு வகைகள் காணப்படு கின்றன. குறிப்பாக,மரவள்ளிக் கிழங்கை சமைக்கும்போது அதில் உள்ள 'க்ளுகோசைட்' எனும் பதார்த்தத்தில் அடங்கியிருக்கின்ற 'சயனைட்' ஆனது கிழங்குடன் சேர்ந்து 'ஹைட்ரோசயனின் அமிலம்' உருவாகின்றது. அது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நச்சுத்தன்மை வாய்ந்தது.

## பெக்கட்டில் அடைக்கப்பட்ட கீரை வகைகள்



பெக்கட்டில் அடைக்கப் பட்ட கீரை வகைகள் குளிர்சாதனப்பெட்டியில் நாட்கணக்கில் வைக் கப்பட்டு விற்பனை செய்யப்படுவ தனால் அவை புதிய தன்மையை இழந்ததாக இருக்கலாம் என்பதோடு, உடல் ஆரோக்கி யத்திற்கு உகந்த தாகவும் இல்லா மல் இருக்கலாம். எனவே, கீரைகளை வாங்கும்போது அவை புதியவையா கவும் சிறிய பூச்சி, புழுக்களின்



தாக்கத்திற்கு உட்படாத வையாகவும் இருக்கின் றனவா என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## புளிப்புச் சுவையுடைய உணவுகள்

வீடுகளில் உணவு சமைப்பதற்கு உலோகத்தினாலான பாத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் புளிப்புச் சுவையுடைய உணவு வகைகளை சமைப்பதனால் உடலுக்கு சில தீங்குகள் நேர்கின்றன.

இத்தகைய பாத்திரங்களில் உணவு களுடன் அன்னாசி, எலுமிச்சை, புளியங்காய் ஆகியவை சேர்க்கப்பட்டு நீண்ட நேரம் வைக்கப்பட்டால், குறித்த உலோகத்துடன் மேற்படி உணவுப் பதார்த்தங்களில் உள்ள அமிலங்கள் தாக்கம் புரிந்து உடலுக்கு நச்சுத் தன் மையை ஏற்படுத்தலாம். அவ்வாறே, பித்தளை,ஈயம் போன்ற உலோகங்களால் ஆன அகப்பை, கரண்டிகளை வினாகிரி அல்லது வேறு ஏதும் அமிலத்தன்மை கலந்த உணவுகளை எடுக்கப் பயன்படுத் தக்கூடாது. அங்கும் மேற்கூறியவாறான தாக்கம் ஏற்படுவதனால் விஷத்தன்மை ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. அத்துடன், எனாமல் மற்றும் அலுமினியப் பாத்திரங் களில் புளிப்புச் சுவையுடைய உணவு வகைகளை பரிமாறுவதும் உடல் நலத் திற்குக் கேடு விளைவிக்கும்.

## காளான் வகைகள்

உருக்குலைந்த மரக்குற்றியில் அல்லது மழைக் காலங்களில் நடைபாதைகளில் வளரும் வெள்ளை நிறத்திலான காளான் வகைகளை உணவுக்காகப் பயன்படுத் துவதை தவிர்க்கவேண்டும். நொதிய வகையைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்ற காளான்களை அறுவடை செய்த உடன் சமைத்து உணவாகக்கொள்வதே சிறந்த தெனக் கூறப்படுகின்றது.

## டின்னில் அடைக்கப்பட்ட உணவு வகைகள்

குளிர்சாதனப்பெட்டியில் நாட்கணக்கில் வைக்கப்பட்டுள்ள பால் கலந்த உணவு வகைகளை பாவனைக்கு முன் சூடேற்ற வேண்டும். அவ்வாறே, டின்னில் அல்லது போத்தலில் அடைக் கப்பட்ட உணவு வகைகளின் காலாவதியாகும் நாள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட காலம் என்பன தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். டின்னின் மேற்பரப்பு துருப்பிடித்திருந்தால் அல்லது மூடி பழுதடைந்திருந்தால் அவற்றை வாங்கக்கூடாது.

## பல்வேறு நிறங்களிலான உணவுகள்

பூந்தி, தோசி வகை, மாஷ்மெலோஸ், மஸ்கட் வகை போன்றவை அளவுக்கதி கமான நிறங்கள் ஊட்டப்பட்டதாக இருப்பின் அவற்றை உணவாகக் கொள்வதில் அவதானம் தேவை. அவற்றினால் உடலுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படலாம். இந்தப் பண்டங்களில் அதிக அளவான செயற்கை சுவையூட்டிகள், நிறங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றதே தவிர, அவற்றிலிருந்து உடலுக்கு எந்தவிதமான நன்மைகளும் கிட்டு வதில்லை. அத்துடன், கடைகளிலும் பாதையோரங்களி லும் திறந்த நிலையில் விற்கப் படுகின்ற உணவு வகைகளை வாங்கி உண்பதையும் தவிர்க்கவேண்டும். எனவே, நாம் உணவாகக் கொள்ளக்கூடியவற்றை உண்பதற்கும் பருகுவதற்கும் முன்னரும் இன்னும் சில உணவுகளை உட்கொண்ட பின்னரும் அவதானமாக செயற்படவேண்டும். சில உணவுகளை உட்கொண்ட பின்னர் அதனுடன் பொருந்தாத இன்னுமோர் உணவை உட்கொள் ளும்போது சில ஒவ்வாமை நோய்களும் ஏற்படலாம்.


-அமீர் ஹுசைன்

# ஓவியம் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்மொழியில் ஒரு நூல்



'அழகியலில் ஓவியக்கலை' என்ற மாணவர்களுக்கான நூலொன்று வெளியிடப்பட்டுள்ளது. எஸ்.எல். எம்.மஹ்ரூஃப் அவர்களின் படைப் பாக அமைந்துள்ள இந்த நூலானது, தரம் 1 முதல் தரம் 9 வரையிலான மாணவர்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அழகியல் பாடத்தில் ஓவியக்கலை பயிலும் மாணவர்களுக்கு தமிழ்மொழி யிலான போதிய நூல்கள் இல்லாத குறையினை இந்த நூல் நிவர்த்தி செய்துள்ளது.



சித்திரம் வரைவது கடினம் அல்லது தெரியாது என்று எண்ணுகின்ற மாணவர்கள் இந்த நூலில் வழங்கப்பட் டுள்ள வழி காட்டல்களை பின்பற்று வதன் மூலம் சிறந்த ஓவியர்களாக வரமுடியும் என்று நம்பலாம். அந்தளவிற்கு இலகுவான விளக்கங் களுடன் மேற்படி நூல் அமைந்துள்ள துடன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வகையிலும் இந்த நூல் அமைந்துள்ளது எனலாம்.

மாணவர்கள் இந்த நூலில் வழங்கப்பட்டுள்ள வழி முறைகளைப் பின்பற்று வதன் மூலம் ஓவியத்தை தமது கைப்பழக்கம் ஆக்கி விடக்கூடிய திறமையைப் பெறும் வகையில் இந்த நூலானது அமைக்கப்பட் டுள்ளமை பாராட்டுக்குரிய அம்சமாகவே அமைந்துள்ளது.

**நூல் பற்றி சில குறிப்புகள்**

தலைப்பு - அழகியலில் ஓவியக்கலை
ஆசிரியர் - எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்
முகவரி - 132-A, தவுலாகல, தும்பபலங்க,ஹந்தெஸ்ஸ.
விலை - ரூபா.210/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?



உலகின் புகழ்பெற்ற ஓவியங்களில் இதுவும் ஒன்று. எண்ணெய் வர்ணத்தால் ஆன இந்த ஓவியம் 16 ஆம் நூற்றாண்டுக்குரியது. இது முன்னணி ஓவியரும் விஞ்ஞானியும் எழுத்தாளருமான லியனாடோ டா வின்சியால் வரையப்பட்டது. பிரான்ஸ் அரசுக்குச் சொந்தமான இந்த ஓவியமானது பெரிஸிலுள்ள 'லூவர்' அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியம் 'லா ஜியோகொண்டா' என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது. எனினும், இதற்கு வழங்கப்படுகின்ற மற்றுமொரு பெயரால்தான் இந்த ஓவியம் பொதுவாக அழைக்கப்படுவதோடு, மக்கள் மத்தியில் வழக்கிலுள்ள பெயரும் அதுவே. ஆகவே,

5

* இந்த ஓவியத்திற்கு மக்கள் மத்தியில் வழக்கத்திலுள்ள பெயர் என்ன? ..............................

** அருகிலுள்ள மூன்று ஓவியங்களில் குறித்த ஓவியத்தில் X அடையாளமிடுக.




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.10.28 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 231**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து 228 விடைகள்

**போட்டி: 02**

1) 5 2) 3 3) 5
4) 6 (இடைவெளியில் ஐஸ்க்றீம் ஒன்று வரையப்படல் வேண்டும்)

**போட்டி: 03**

மேலிருந்து கீழாக வரவேண்டிய சொற்கள்;
BALLOON, STAR
இடமிருந்து வலமாக வரவேண்டிய சொற்கள்;
CAKE, CANDLES, TRAIN

**போட்டி: 04**

1. design
2. honey
3. sunflower
4. castle
5. enlarge

**போட்டி: 05**

1. ஆறப்போடுதல் - காலம் தாழ்த்தல்
2. ஒற்றைக்காலில் நிற்றல் - பிடிவாதம்
3. கைகலத்தல் - சண்டையிடுதல்
4. வாய் மூத்தல் - அடக்கமின்றிப் பேசுதல்
5. நாக்குப் புரளுதல் - வாக்கு/சொல் மாறுதல்

### கண்டுபிடியுங்கள்

| K | M | Y | F | B | G |
|---|---|---|---|---|---|
| 8 | 2 | 5 | 6 | 3 | 4 |

அ) முகுந்தனின் அலுவலக அடையாள அட்டை இலக்கமானது MFBBK ஆகிய எழுத்துக்கள் குறித்து நிற்கும் எண்களை முறையே கொண்டது. முகுந்தனின் அடையாள அட்டை இலக்கம் யாது?..............................

ஆ) YGMFB ஆகிய எழுத்துக்கள் குறித்து நிற்கும் எண்களை முறையே கொண்டதுதான் நஜாத்தின் அடையாள இலக்கமாக இருக்கின்றது. அந்த இலக்கம் யாது?

..............................

4

இ) MYFB ஆகிய எழுத்துக்கள் குறித்து நிற்கும் இலக்கங்களை முறையே எழுதினால் வரும் இலக்கத்துடன் BFFM ஆகிய எழுத்துக்கள் குறித்து நிற்கும் இலக்கங்களை முறையே எழுதினால் வரும் இலக்கத்தைக் கூட்டினால், கீதாவின் அலுவலக அடையாள அட்டை இலக்கம் வரும். அதன்படி,

* கீதாவின் அடையாள அட்டை இலக்கம் யாது? ..............................

** அந்த இலக்கங்கள் குறித்து நிற்கும் எழுத்துக்களை முறையே எழுதுக.

..............................

1



கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை எழுத்துக்கூட்டத்தினுள் இருந்து இனங்கண்டு நிறந்தீட்டுங்கள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| G | F | C | Q | D | Q | A | B | Z | X | F | H | N | S | R |
| M | N | T | C | N | I | T | X | E | G | S | E | A | M | F |
| Z | J | O | G | O | B | N | C | I | E | S | R | S | S | Q |
| S | K | L | R | P | V | O | Q | K | B | Q | B | E | M | F |
| L | K | I | H | T | T | R | I | S | C | Q | I | L | A | M |
| X | A | C | I | R | S | P | O | A | A | W | V | A | L | K |
| X | Y | R | O | H | S | A | R | C | O | U | O | C | L | T |
| Z | T | M | G | R | Y | N | L | L | L | M | R | S | X | Y |
| E | Q | O | V | E | I | F | S | B | D | X | E | S | X | H |
| Q | Q | H | G | V | Q | P | L | A | N | T | S | V | K | N |
| C | R | H | O | X | E | U | X | E | E | G | L | S | Y | T |
| N | X | R | F | M | T | A | P | E | G | G | S | Q | Y | S |
| Q | E | L | C | Y | S | C | T | H | K | T | R | S | W | K |
| S | E | E | R | T | A | H | S | N | P | Z | G | Q | K | D |
| E | B | Y | K | Y | F | D | T | N | M | A | R | B | C | Q |

CARNIVORE, LARGE, PLANTS, ROCKS, SCALES, TREES
HERBIVORE, DINOSAURS, EGGS, EXTINCT, FAST
SLOW, SMALL, SPIKES, TEETH, STRONG

2




## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## பொருத்தமான கட்டங்களை ஒட்டி, படத்தைப் பூர்த்தி செய்க

3



### அற்லஸ் அறிவுக்கு விருந்து 228 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.முர்ஷிதா, தரம் - $7^{A}$,
அல்-அதான் ம.ம.வித்., பதுளை.

**போட்டி: 02**
லி.நிருஷன்,
தரம் - $2^{B}$, முகத்துவாரம் இ.கல்.,
கொழும்பு-15.

**போட்டி: 03**
சி.பவிதா, தரம் - 8,
யாழ்.இந்து ம.கல்., யாழ்ப்பாணம்.

**போட்டி: 04**
பயாஸ் பாரூக், தரம் - $9^{C}$,
முகர்ரமா ச.பாட.,
கொழும்பு-09.

**போட்டி: 05**
எஃப்.பர்வின், தரம் - 12,
க/அல்-அஸ்ஹர் ம.கல்.,
தெஹியங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிளக்பூல்' தீபாலங்காரத் திருவிழா



இங்கிலாந்தின் கடற்கரையோர சுற்றுலாத் தலமான பிளக்பூலில் வருடாந்தம் தீபாலங்காரத் திருவிழாவொன்று நடைபெற்று வருகின்றது. இதனை கண்டுகளிப்பதற்காக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். இத்தீபாலங்காரத் திருவிழா 1879 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இந்த தீபாலங்காரத் திருவிழாவுக்காக 10 கிலோமீற்றர் தூரத்துக்கு சுமார் 10 லட்சம் வண்ண, வண்ண மின்குமிழ்களால் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு மிளிரும் ஒளிமயமானது கண்கொள்ளாக் காட்சியாகும்.

வருடாந்தம் ஒகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாகும் இந்தத் தீபாலங்காரத் திருவிழா 66 இரவுகளுக்கு காட்சி தந்து கொண்டிருக்கும். மயில் மற்றும் அழகிய கலை வடிவங்கள் பிரமாண்டமாக அமைக்கப்பட்டு அவை வண்ண மின்குமிழ்களால் அலங்கரிக்கப்படுகின்றன. இவற்றை அமைப்பதற்கு சுமார் 22 வாரங்கள் ஆகின்றனவாம். அத்துடன், பல கோடி ரூபா செலவாகின்றதாம்.

விழாக்காலத்தில் வெள்ளி இரவு இசை இரவாகும். அன்றைய தினம் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த தீபாலங்காரத் திருவிழாவை சிறப்பிக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

# 'நொபேல்' பரிசு பெற்ற முதியவரும் இளைஞரும்

ரஷ்யாவில் பிறந்த அமெரிக்கரான லெனிட் ஹர்விஸ் (Leonidhurwicz). என்பவர்தான் 'நொபேல்' பரிசு பெற்றவர்களில் வயதில் மிகவும் முதிர்ந்தவராவார்.



லெனிட் ஹர்விஸ் | லோறன்ஸ் பிரக் | வைட்டலி ஜின்ஸ்பர்க்

பொருளாதாரத்துக்கான 'நொபேல்' பரிசை 2007ஆம் ஆண்டு பெறும்போது இவருக்கு வயது 90. 'நொபேல்' பரிசு பெற்ற பின்னர் சில மாதங்களே வாழ்ந்த இவர் 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் காலமானார்.

இந்தவகையில், பிரித்தானியரான லோறன்ஸ் பிரக் (Lawrence Bragg) என்பவர்தான் நொபேல் பரிசு பெற்றவர்களில் வயதில் மிக இளையவராவார். பௌதிகத்துக்கான நொபேல் பரிசை 1915 ஆம் ஆண்டு பெறும்போது இவருக்கு வயது 25. அதன் பின்னர் நீண்டகாலம் வாழ்ந்த இவர் 1971 ஆம் ஆண்டு தனது 81 ஆவது வயதில் காலமானார்.

நொபேல் பரிசு பெற்றவர்களில் தற்போது உள்ள மிக வயது முதிர்ந்தவர் ரஷ்யாவைச் சேர்ந்த வைட்டலி ஜின்ஸ்பர்க் (Vitaly Ginzburg) என்பவராவார். இவர் 2003 ஆம் ஆண்டு பௌதிகத்துக்கான 'நொபேல்' பரிசைப் பெற்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 21, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org